# தொழில்,தொழில் உறவுகள், அமைச்சு

# செயலாற்றுகை அறிக்கை 2013

**வெளியீடு**
தொழில்,தொழில் உறவுகள் அமைச்சு

**தயாரிப்பு**
திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

# தொழில், தொழில் உறவுகள் அமைச்சு

## செயலாற்றுகைகள் – 2013

### பொருளடக்கம்

பக்கம்


- தொழில்,தொழில் உறவுகள் அமைச்சர்
  கௌரவ காமினி லொகுகே அவர்களின் செய்தி................................ II
- தொழில், தொழில் உறவுகள் பிரதி அமைச்சர்
  கௌரவ றியர் அட்மிறல் கலாநிதி
  சரத் பீ.வீரசேகர அவர்களின் செய்தி.................................................. III
- தொழில்,தொழில் உறவுகள் அமைச்சுச் செயலாளரின் செய்தி.................. IV
- தொலைநோக்கு மற்றும் செயற்பணி.............................................. 1
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள்............................. 2
- உபாயத் திட்டங்களும் தாபனத்தின் சிறப்புகளும் .................................. 3


**அமைச்சின் செயலாற்றுகை**


- அமைச்சு அலுவலகம் ................................................................. 4 - 9
- தொழில், வெளிநாட்டு தொடர்புகள் பிரிவு ...................................... 10 - 13
- திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு ........................... 14
- நிருவாகம் மற்றும் தாபனப் பிரிவு ................................................. 15
- நிதிப் பிரிவு ....................................................................... 16
- கருத்திட்டச் செயலகம் .............................................................. 17 - 18


**அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வரும் நிறுவனங்கள்**


- தொழில் திணைக்களம் .......................................................... 19 - 35
- வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் ....................... 36 - 37
- தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் ......................................... 38 - 39
- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் .................. 40 - 52
- சிரம வாசனா நிதியச் சபை ........................................................ 53 - 54



## தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்
## கௌரவ காமினி லொகுகே அவர்களின் செய்தி

தொழில், தொழில் உறவுகள் அமைச்சராக, இந்த அமைச்சின் வரவுசெலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள தொழில், தொழில் உறவுகள் அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களினால் இலங்கையின் உழைக்கும் வர்க்கத்தினருக்கு 2013 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்ட சேவைகளை, முன்னேற்றங்களை விபரிக்கின்ற இந்த செயலாற்றுகைக்கு செய்தி யொன்றைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் சிறந்த வேலைச் சூழலை உருவாக்குவதனூடாக எமது இலக்குகளை வெற்றிகொள்வதற்காக நாம் உழைத்துள்ளோம்.

இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்றுகின்றபோது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி உயர் நிலையில் இருத்தல் வேண்டும். இந்நோக்கத்திற்கு ஊழியர் படையிலிருந்து பெறப்படுகின்ற பங்களிப்பு முக்கியமானதாகும்.

தொழிற்றுறை அமைதி மற்றும் ஐக்கியத்தைப் பேணுவதனூடாக உழைக்கும் மக்களின் உயர் மட்ட தொழில் உற்பத்தித்திறன் மற்றும் பயனுறுதியை பேணுவதற்கான இயலுமையை நாம் பெற்றுள்ளமையானது வெற்றியொன்றேயாகும்.

சர்வதேச தொழில் தாபனத்தின் ஒருங்கிசைவுடன், இலங்கையின் ஊழியார் படைக்கான பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு நாம் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம்.

சட்டங்களின் திருத்தம், தொழில் நியமங்களை வலுப்படுத்துதல், தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல், பெண்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல் போன்றவை கடந்த ஆண்டில் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல்வேறு கல்வி, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினூடாக, தொழில்தருநர், பணியாளர்களுக்கிடையில் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். முத்தரப்பு கலந்துரையாடல் களின் விளைவாக தொழிற்றுறை அமைதியைத் தொடர்ந்தும் பேணுவதற்கு எமக்கு முடிகின்றது.

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை அடைவதில் குழும உணர்வுடன் பணிபுரிந்த அமைச்சின் செயலாளர் உபாலி விஜயவீர உள்ளடங்கலாக நிறுவனங்களின், பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் அனைத்துப் பதவியினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அமைச்சிற்கு புதிய பிரதி அமைச்சரை வழங்கியுள்ள, இச்செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தலைமைத்துவத்தையும், வழிகாட்டலையும் வழங்குகின்ற அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் இச்சர்ந்தர்ப்பத்தில் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

காமினி லொகுகே
**தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்**



**தொழில், தொழில் உறவுகள் பிரதி அமைச்சர்**
**கௌரவ றியர் அட்மிறல் கலாநிதி சரத் பீ.வீரசேகர அவர்களின் செய்தி**

தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் வரவுசெலவுத்திட்டக் குழு நிலை விவாதத்தின் போது தங்களுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற செயலாற்றுகை அறிக்கை 2013 இற்கு இச்செய்தியை வழங்குவதையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த வெளியீடானது, தேசிய உற்பத்தியை அதிகரிப்பதில் இலங்கையர் சமூகத்தின் மையமாக நிலையான, ஆரோக்கியமான ஊழியர் படையை உருவாக்குவதற்காக பயனுறுதிவாய்ந்த, ஆக்கத்திறனுடன் பங்களிப்புச் செய்கின்ற தரமான மனித வளத்தை விருத்தி செய்வதில், 2012 ஒக்டோபர் 01 முதல் 2013 செப்ரெம்பர் 30 வரையான ஒரு வருட காலப்பகுதியில் இந்த அமைச்சினால் வழங்கப்பட்ட சேவைகளின் தொகுப்பாகும்.

தொழிற்றுறை உறவுகள் மற்றும் இணக்கப்பாட்டு செயன் முறையினைப் பேணியதனூடாக மற்றும் பணியாளர், தொழில்தருநர் மற்றும் அரசு ஆகிய முத்தரப்பினர்களிடையேயான உறவுமுறையை ஒழுங்காகப் பேணுகையில் சமூகக் கலந்துரையாடல் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்பு வழங்குவதற்காக தொழில்தருநர் - பணியாளர் ஆகிய தரப்பினரை நான் பாராட்டுகின்றேன்.

தனியார் துறையில் பணிபுரிகின்ற எட்டு மில்லியன் உழைக்கும் வர்க்கத்தின் சேவை நிலைமைகளை செம்மைப்படுத்துவதனூடாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக ஆண்டு காலப்பகுதியில் அமைச்சினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் நான் மகிழ்வடைகின்றேன்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதிமேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களினதும், தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களினதும் வழிகாட்டலின் கீழ் தமது கடமைகளை ஆற்றிய செயலாளர், நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கின்ற அதேவேளையில், நாட்டின் உழைக்கும் வர்க்கத்தின் சிறப்பிற்காக பரந்தளவில் சேவையாற்றுவதன் மூலம் ஆசியாவின் அதிசயமாக வருவரு என்ற எமது அணிவகுப்பு முறையினை நோக்கிய பங்களிப்பினைச் வழங்குவதற்கு தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

றியர் அட்மிறல் கலாநிதி சரத் பீ.வீரசேகர
**தொழில், தொழில் உறவுகள் பிரதி அமைச்சர்**



**தொழில், தொழில் உறவுகள் அமைச்சுச்**
**செயலாளரின் செய்தி**

தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் 2014 ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டக் குழு நிலை விவாதத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அமைச்சினதும், அதன் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட 2013 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பான தகவலைச் சமர்ப்பிக்கின்ற இந்த வெளியீட்டை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் பயன் தகுதி உயர் மட்டத்தில் நிலைத்திருப்பதன் காரணமாக, தொழில் திணைக்களம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், சிரம வாசனா நிதியம் மற்றும் தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களால் ஆய்வாண்டு காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் திருப்திகரமான அபிவிருத்திசார் முன்னேற்ற அறிக்கை முன்வைக்கப்படுகின்றதென்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மஹிந்த சிந்தனையின் கொள்கை விளக்கத்தில் உழைக்கும் மக்களின் மேம்பாட்டிற்கான தொழில் ஆலோசனைச் சபையை வலுப்படுத்துவதனூடாக தொழில்தருநர், பணியாளர்களது உறவு முறையைப் பலப்படுத்துவதற்கு சமூகக் காப்பு மற்றும் பாதுகாப்பினை பரந்தளவானதாக்கி, அதனைத் தேசிய மட்டத்திலிருந்து உள்ளூர் மட்டத்திற்கு விரிவுபடுத்துதல், தொழில் நியமங்களை பலப்படுத்துதல், புதிய சம்பளச் சபைகளைத் தாபித்தல், அதற்கான உள்ளடக்கத்தை விரிவுபடுத்துதல், தொழில்புரிகின்ற பெண்களின் உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் தீங்கிளைக் கின்ற சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல், ஆராய்ச்சிகளை நடத்துவதனூடாக பயனுள்ள மனித வளத்தை உருவாக்குதல், தொழிற்றுறையின் முன்னேற்றத்திற்காக பரந்த கல்வி, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல், மாற்றுத்திறனாளிகளை தொழிலுக்கு அமர்த்துவதற்காக தேசிய செயலகத்தைத் தாபித்தல் மற்றும் சர்வதேச தொழில் தாபனம் உள்ளடங்கலான சர்வதேச தாபனங்கள் மற்றும் நிறுவனங்களினூடான தொடர்புகளைப் பலப்படுத்துதல் போன்ற விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

பௌதீக மற்றும் மனித வளங்களின் உரிய பயன்பாட்டினூடாக 2013 ஆம் ஆண்டில் நாம் பெற்றுக்கொண்ட மேம்படுசார்ந்த எதிர்கால நடவடிக்கைகளை 2014 ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்துவதற்கான தலைமைத்துவத்தை, வழிகாட்டலை வழங்கியமைக்காக தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களுக்கும், பிரதி அமைச்சர் கௌரவ றியர் அட்மிறல் கலாநிதி சரத் பீ.வீரசேகர அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இச்செயலாற்றுகைகள் வெற்றிபெறுவதற்கு தமது பங்களிப்பினை நல்கியிருந்த அமைச்சின் மேலதிகச் செயலாளர் உள்ளடங்கலாக, நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பதவியினருக்கும் அத்துடன் இந்த வெளியீட்டைத் தயாரித்துள்ள திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பதவியினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டபிள்யு.ஜே.எல்.யு.விஜயவீர
**செயலாளர்**
**தொழில்,தொழில் உறவுகள் அமைச்சு**

# தொழில்,தொழில் உறவுகள் அமைச்சு

தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் பிரதான குறிக்கோள்கள், இலங்கையின் தனியார் துறையில் பணியாற்றுகின்ற சுமார் 8 மில்லியன் உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சேவை நிபந்தனைகளை மேம்படுத்தும் நோக்கில் உற்பத்தியையும், தொழில் ஆக்கத்திறனையும் அதிகரிப்பதற்கு முன் தேவைப்பாடான தொழிற்றுறை அமைதி மற்றும் தொழில்தருநர், பணியாளர் உறவுமுறையைத் தாபிக்கின்ற கொள்கைகளை வகுத்தமைத்தல் மற்றும் அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் என்பவையாகும். இதனை முன்னெடுப்பதற்கான கொள்கை வழிகாட்டல், தொழில் மீதான அரசாங்கக் கொள்கையினால் வழங்கப்படுகின்றது. இந்த அமைச்சிற்கு உரித்தளிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுப் பரப்பானது, உழைக்கும் மக்களின் நலன்புரிக்காக காலத்திற்குக் காலம் வகுத்தமைக்கப்படுகின்ற தொழில் சட்டங்கள் மற்றும் சட்டவாக்கங்களுடன் பரந்துபட்டது. அமைச்சின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியினைக் கீழே காணலாம்.

## தொலைநோக்கு

திருப்திமிகு உற்பத்திசார் தொழிலணி

## செயற்பணி

தொழிற்றுறை அமைதி, சமூகப் பாதுகாப்பு, உச்ச மனிதவலு பயன்பாடு, உற்பத்தித்திறன் மற்றும் சீரிய வேலையினூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தியை அடைவதனை நாடிய பங்களிப்பு

# அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற பிரிவுகளும் நிறுவனங்களும்

- தொழில், தொழில் உறவுகள் அமைச்சு
  - அமைச்சு அலுவலகம்
    - தொழில்,வெளிநாட்டுத் தொடர்புகள் பிரிவு
    - திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
    - நிருவாகம் மற்றும் தாபனப் பிரிவு
    - நிதிப் பிரிவு
    - கருத்திட்டச் செயலகம்
  - தொழில் திணைக்களம்
  - நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்
  - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்
  - தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்
  - சிரம வாசனா நிதியச் சபை

## உபாயத் திட்டங்கள்

- சமூகக் கலந்துரையாடலினூடாக முத்தரப்பு அக்கறைதாரர்களை வலுப்படுத்தியன் பின்னர் தொழில்தருநர், பணியாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
- அக்கறைதாரர்களுடன் இணங்குகின்றவாறு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தொழில் சட்டவாக்கங்களைத் திருத்துதல்.
- சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் உள்ளடக்கத்தை விரிவாக்குதல்.
- 2016 ஆம் ஆண்டளவில் சிறுவரை மோசமான வகையில் வேலைக்கமர்த்துவதை இல்லா தொழிப்பதற்கான செயல் வழியினை நடைமுறைப்படுத்துதல்.
- ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச நியமங்கள் தொடர்பில் கண்காணித்தல் அலகொன்றினைத் தாபித்தல்.
- பயனுறுதிவாய்ந்த உற்பத்தித்திறன்சார் சேவைகளை வழங்குவதற்காக அனைத்து சமூகப் பாதுகாப்பு சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் கொண்டு வருதல் (மெஹேவர பியஸ).
- வேலை உலகத்திற்கான பால்நிலை சமத்துவம் மற்றும் பெண் பணியாளர்களின் உரிமைகளை வலுப்படுத்துவதும் பாதுகாப்பதும் தொடர்பான கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.
- துறை தொடர்பான தரவுத் தளமொன்றை நாளது வரைப்படுத்ததல்.

## நிறுவனஞ்சார் சிறப்புகளும் புத்துருவாக்கங்களும்

- ஊழியர் சேமலாப நிதியத்திற்காக புதிய தொழில்தருநர்களை ஒரு நாளில் பதிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்துதலும் அவற்றை மாவட்ட அலுவலகங்கள் மட்டத்தில் பரவலாக்குதலும்.
- தகவல் தொழில்னுட்ப முறைகளைப் பின்பற்றுவதனூடாக பயனுறுதிவாய்ந்த உதவுதொகை அறவீட்டு நடைமுறையை ஆக்குதல்.
- அங்கத்தவர்களின் கைவிரல் அடையாளத்தை இலத்தினரியல் முறைப்படி சேகரித்ததன் பின்னர் ஊ.சே.நி இலக்கத்தை தேசிய அடையாய அட்டை இலக்கத்திற்குள் மாற்றுதனூடாக சமூக சேவைகளை பயனுறுதிவாய்ந்ததாக்கல்.
- மோசமான வகையில் சிறுவரை வேலைக்கிடுதலை இல்லாதொழித்தலை பாராளுமன்றத் தினூடாக அங்கீகரித்தன் பின்னர், 2016 ஆம் ஆண்டில் இதற்கான ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்காக உரிய அக்கறைதாரர்களுக்கு விழிப்புணர் வினைக் கொண்டுவருதல்.
- தொழில் அலுவலர்களின் கள ஆராய்ச்சிகளை கண்காணிக்கும் விசேட அலகினைத் தாபித்தல்.
- தொழில்தருநர்கள்,பணியாளர்களின் பாதுகாப்பிற்காக குறித்த கொள்கைகளின் அறிமுகம் (வேலை உலகத்திற்கான எச்.ஐ.வி./எயிட்ஸ் தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துதல்).
- பால்நிலை சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக ஜெண்டர் பணியகத்தை தாபித்தல்.
- தொழில்தருநர்கள்,பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காகத் தாபிக்கப்பட்ட இரண்டு நிறுவனங்களிலும் சுய நம்பிக்கையை உருவாக்கல்.

**2013 ஆம் ஆண்டில் முன்னேற்றம்**

- கைத்தொழில் பிணக்குளின் எண்ணிக்கையைக் குறைத்தல்.
- வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையையும் இழக்கின்ற உழைப்பு மணித்தியாலத்தைக் குறைத்தல்.
- ஒப்பமிடப்பட்ட கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.
- ஊழியர் சேமலாப நிதியத்தின் உள்வாங்கல் அதிகரித்தல்.
- ஊழியர் சேமலாப நிதியத்தின் சேவைகளின் பயனுறுதியை அதிகரித்தல்
    - பணியாளர்களை மீளப் பதிவுசெய்தல்
    - ஊழியர் சேமலாப நிதியப் பணியாளர்களின் விபரங்களை கணினிமயப்படுத்துதல்.
- புதிய சம்பளச் சபைகளைத் தாபித்தல்.
- மோசமானவகையில் சிறுவரை வேலைக்கிடுதலை இல்லாதொழிப்பதற்காக உரிய அலுவலர்களுக்கும் தொழில்தருநர்களையும் பணியாளர்களையும் வழிப்புணர்வூட்டுதல்.
- உலகப் போட்டித்தன்மைக்கு முகம்கொடுக்கும் வகையில் தற்போதிருக்கின்ற சட்டங்கள் மற்றும் சட்டவாக்கங்களின் பிரச்சனைகளை அடையாளங்காணுதல்.
- தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினைச் சீர்ப்படுத்துதல்.
- தொழிலிலீடுபட்டுக்கொண்டிருக்கையில் விபத்து ஏற்படுகின்ற பணியாளர்களுக்கு பயனுள்ள நட்டஈட்டுக் கொடுப்பனவு நடைமுறையை ஏற்படுத்துதல்.
- தொழிலிலீடுபட்டுக்கொண்டிருக்கையில் விபத்து ஏற்படுகின்ற பணியாளர்களில் தங்கியிருப்போருக்கு சிரம வாசனா நிதியத்தினூடாக நலன்புரிகளை வழங்குவதற்கு ஒழுங்ககள் செய்தல்.
- முத்தரப்பு அக்கறைதாரர்களுக்காக ஆராய்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வுகளை நடத்துதல்.
- முத்தரப்பு உறவினைப் பலப்படுத்துவதற்கு தேசிய தொழில் ஆலோசனைச் சபை மற்றும் உள்ளூர் தொழில் ஆலோசனைச் சபைகளை நடத்துதல்.

**அமைச்சின் நிதிசார் முன்னேற்றம்**

| மூலதனச் செலவினங்கள் | 2013ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் (ரூபா) | 2013 செப்ரெம்பர் வரையான முன்னேற்றம் | % |
|---|---|---|---|
| • மூலதன ஆதனங்களின் சீராக்கமும் நிருமாணமும் | 5,140,000 | 3,899,980 | 76 |
| • பெறுகை (மூலதனச் செலவினம்) | 12,500,000 | 10,570,213 | 85 |
| • மூலதன பரிமாற்றம் | 11,000,000 | 4,171,237 | 38 |
| • இயலளவை வளர்த்தல் | 1,120,000 | 417,233 | 37 |
| • ஏனைய நிதிச் செலவினம் | 30,000,000 | 10,316,399 | 34 |
| **மொத்தம்** | **59,760,000** | **29,375,062** | **49** |

## அமைச்சின் குறிக்கோள்கள்

- முத்தரப்பினை வலுப்படுத்துவதனூடாக தொழில்தருநர்கள், பணியாளர்களுக் கிடையிலான உறவினைப் பலப்படுத்துதல்.
- சர்வதேச நியமங்களுடன் இணங்குகின்ற சேவை நியமங்கள் மற்றும் வேலையாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துதல்.
- சிறுரை மோசமான வகையில் வேலைக்கிடுதலை இல்லாதொழித்தல்.
- பெண் பணியாளர்களை வலுப்படுத்தலும் பாதுகாத்தலும் மற்றும் பால்நிலை சமத்துவத்தை ஊக்குவித்தல்.
- தொழில் சட்டவாக்கங்கள் மற்றும் நடவடிக்கைமுறைகளின் நெகிழ்வுப் போக்கினை அதிகரித்தல்.
- சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான உரிய முறையியலைத் தயாரித்தல்.

## அமைச்சிற்கு உரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகள்

2010.11.21 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலிற்கமைவாக தொழில், தொழில் உறவுகள் அமைச்சிற்கு பின்வருகின்ற தத்துவங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் உரித்தளிக்கப்பட்டுள்ளன.

1. தொழில் உறவுகள்,சர்வதேச தொழில் நியமங்கள் மற்றும் பணியாளர்களின் நலன்புரி தொடர்பான கொள்கைகளை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.
2. தேசிய திட்டமிடல் அதிகார சபையுடன் இணங்கப்பட்ட காலத்திற்குள்ளும் திட்டமிடப்படப்பட்ட வளங்களுக்குள் உரிய தேசிய குறிக்கோள்களை அடையும் நோக்கத்திற்காக அத்தகைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தலை வழிப்படுத்தல்.
3. சர்வதேச தொழில் தாபனம்,ஆசிய உற்பத்தித்திறன் தாபனம் மற்றும் சர்வதேச சமூகப் பாதுகாப்பு தாபனத்துடன் பரிமாற்றங்கள்.
4. ஊ.ழியர் சேமலாப நிதியம், தனியார் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஓய்வூதியத் திட்டம் என்பவற்றை நிருவகித்தல்.
5. கைத்தொழில் தொடர்புகள் மற்றும் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்.
6. கைத்தொழில் நீதிமன்றங்கள் தொடர்பான செயற்பாடுகள்.
7. தொழில் சங்கங்களைப் பதிவு செய்தல்.
8. சம்பளங்களுக்கான மற்றும் தொழிற்சாலை வேலையாளர்களின் தொழில் நிலைமைகள், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரிக்கான கொள்கையை வகுத்தமைத்தல்.
9. வேலையற்றோர் நலன்களின் காப்புறுதித்திட்டம்.
10. தொழில் திணைக்களம்,தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்,தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அதிபதி,சிரம வாசனா நிதியம் மற்றும் ஜெண்டர் பணியகம் போன்ற அத்தகைய நிறுவனங்களுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களும்.
11. தொழில் தாபனங்களின் அறவீடுகளை ஒழுங்கமைத்தல்.
12. மேலுள்ள நிறுவனங்களை கண்காணித்தல்.

## நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்கள் :

1. 1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பணியாளர் சபைகள் சட்டம்
2. 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம்
3. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கபணிக்கொடைச் சட்டம்
4. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழில் முடிவுறத்தல் சட்டம்
5. 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தொழில் சங்கச் சட்டம்
6. 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி நிறுவகச் சட்டம்
7. 1954 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க கடைகள் மற்றும் காரியாலய ஊழியர் (தொழில் மற்றும் சம்பளங்கள் ஒழுங்குபடுத்தல்) சட்டம்
8. 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்
9. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் செமலாப நிதியச் சட்டம்
10. 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம்
11. 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்
12. 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கபெண்கள்,இளைஞர்கள் மற்றும் சிறுவரை தொழிலுக்கமர்த்தல் சட்டம்
13. 1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் சட்டம்
14. 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டம்
15. 1956 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க கட்டண அறவீட்டு தொழில் முகவர்கள் சட்டம்
16. 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

## நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய கொள்கைகள்

- இலங்கையின் சீரிய வேலைக்கான தேசிய கொள்கை
- இலங்கையின் பால்நிலை பற்றிய தேசிய கொள்கை
- வேலை உலகத்திற்கான எச்.ஐ.வி / எயிட்ஸ் தடுப்பு தேசிய கொள்கை

## இலங்கையில் சீரிய வேலை மீதான தேசிய கொள்கை

இலங்கை அபிவிருத்தி என்ற பாதையில் முன்னேற வேண்டுமென்றால் சீரிய வேலை தொடர்பான பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டியிருக்கின்றன என்பது இந்த கொள்கை கூற்றினூடாக அவதானிக்கப் படுகின்றது. இதனூடாக, உற்பத்திதிறன்சார் வேலையைப் பெறுவதில் சுதந்திரம், சமத்துவம், பாதுகாப்பு மற்றும் மனித கௌரவத்தைப் பாதுகாக்கின்ற நிலையின் கீழ் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சமமான வாய்ப்பை விருத்தி செய்வதற்கு திட்டமிடப்படுகின்றது. மேலும், இக்கொள்கையின் அடிப்படைக் கட்டமைப்பு, வேலை செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல், தொழிலில் சமமான வாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூகக் கலந்துரையாடல் போன்ற அத்தகைய காரணிகளினடிப்படையில் அமைந்திருக்கின்றது.

**சீரிய வேலைக்கான தேசிய கொள்கையின் குறிக்கோள்கள்**

1. சட்டரீதியாகவும், நடைமுறையிலும் சர்வதேசச் சட்டங்களுக்கமைவான அடிப்படைக் கொள்கைகள் மற்றும் உரிமைகள் மீது சர்வதேச தொழில் தாபனத்தின் கூற்றினை பூரணமாக நடைமுறைப்படுத்தல்.
2. ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வேலையை உருவாக்குதல் மற்றும் சிறந்த சம்பளத்துடனான தொழில் என்பதனை நோக்கி தேசிய உற்பத்தித்திறன்சார் கொள்கை மற்றும் தேசிய வேலைவாய்ப்புக் கொள்கையை கண்காணித்தல்.
3. பால் நிலை மற்றும் ஏனைய உரிய விடயங்களுக்கு உணர்வுபூர்வமான சமூகப் பாதுகாப்பினூடாக பொருளாதார, சட்ட மாற்றங்களின் சமூகச் செலவினைக் குறைத்தல் மற்றும் தொழில்புரிகையில் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவத்தைச் செம்மைப்படுத்தல்.
4. சமூகப் பொருளாதார கொள்கைகளைச் செம்மைப்படுத்துவதில் பங்குபற்றுவதனை நோக்கி முத்தரப்பினரையும் வலுப்படுத்துதல்.

இந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டமானது நான்கு பிரதான தூண்களிற்குள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- வேலைவாய்ப்பை உருவாக்குதல், அபிவிருத்தி மற்றும் தேசிய உற்பத்தித்திறன்
- வேலைத்தலத்தில் உரிமைகள்
- சமூகப் பாதுகாப்பு
- சமூகக் கலந்துரையாடல்

மேலுள்ள நான்கு தூண்களுக்கும் மேலதிகமாக, பின்வருகின்ற இரண்டு விடயப் பரப்புகளை நடைமுறைப்படுத்துகையில் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைக்கப்படும்.

1. உற்பத்தித்திறன் மேம்பாடு
2. பால் நிலை சமத்துவத்தை உத்தரவாதப்படுத்துதல்

இதன்படி, அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற அனைத்து நிறுவனங்களும் சீரிய வேலைச் சூழலை உருவாக்குவதில் பின்வருகின்ற பொருள்சார் விடயப் பரப்புகளினூடகத் தொழிலாற்றவுள்ளன.

1. தொழில் அமைதி மற்றும் பொது மக்களின் ஐக்கியம்
2. தொழில் நியமங்கள் மற்றும் சட்டவாக்கங்களை நடைமுறைப்படுத்தல்.
3. பெண் வேலையாளர்களைப் பாதுகாத்தலும், சிறுவரை வேலைக்கிடுதலை இல்லாதொழித்தலும்.
4. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
5. சமூகப் பாதுகாப்பு
6. தொழில் துறையில் கல்வி, பயிற்சி, ஆய்வு மற்றும் அபிவிருத்தி

இந்த ஆண்டுக்கான சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்திற்காக 27 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதில் 8.39 மில்லியன் ரூபா 2013 செப்ரெம்பர் 30 ஆம் திகதியளவில் செலவளிக்கப்பட்டுள்ளது. இந்த முன்னேற்றம் 31% ஆகும்.

### வேலை உலகத்திற்கான எச்.ஐ.வி. / எயிட்ஸ் பாதுகாப்பிற்கான இலங்கையின் தேசிய கொள்கை

இலங்கையில் வேலை உலகத்திற்கான எச்.ஐ.வி. / எயிட்ஸ் தொடர்பில் தேசிய முத்தரப்பு அனுசரணையைக் கட்டியெழுப்பும் நோக்கில் உரிய அக்கறைதாரர்களுடன் கலந்தாலோசித்ததன் பின்னர் இக்கொள்கை உருவாக்கப்பட்டது. இக்கொள்கை, ஆராய்ச்சி ஆலோசனை இயலுமையை அதிகரிப்பதற்கும் மற்றும் தொழில், தொழில் உறவுகள் அமைச்சு, சமூக பங்காளிகள் மற்றும் சுகாதார அமைச்சின் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதனை நோக்கிய தேசிய கொள்கைக்கும் நிருபணமான ஆதாரமொன்றாக விளங்கும். இலங்கையில் தொழிலணியின் நன்மைக்கான தேசிய கொள்கையொன்றை கொண்டிருப்பது கட்டயமானதாகும். ஆசிய நாடுகளில் பரவுகின்ற எச்.ஐ.வி தொற்று காரணமாக பரவக்கூடிய நோய் தொடர்பில் இலங்கையர்கள் அறிந்திருத்தல் வேண்டும். இக்கொள்கை, வேலை உலகில் எச்.ஐ.வி. / எயிட்ஸ் தொடர்பான தேசிய கொள்கையின் உரிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு தேசிய அக்கறைதாரர்களுடன் கலந்துரையாடிய பின்னர் வகுத்தமைக்கப்பட்டுள்ளது.

### தொழில்,தொழில் உறவுகள் அமைச்சின் செயற்பரப்பெல்லைக்குள் வருகின்ற தாபனங்கள்

- தொழில் திணைக்களம்
- தேசிய தொழில் கற்கைகள்
- சிரம வாசனா நிதியச் சபை
- வேலையாளர் நட்ட ஈட்டு ஆணையளர் அலுவலகம்
- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

## உரிய காலப்பகுதியில் அமைச்சின் விசேட செயற்பாடுகள்



**மாற்றுத்திறனாளிகள் தொழில் அலகுக்கான உத்தியோகபூர்வ இணையத்தள அங்குரார்ப்பணம் (2013 யூலை 30)**



சர்வதேச பாதுகாப்பு மற்றும் சுகாதார தினத்தையொட்டி பியகமவில் அமைதி அணிவகுப்பு (28.04.2013)



இலங்கை போக்குவரத்துச் சபை ஓய்வூதியதாரர்களுக்கு பணிக்கொடை வழங்குதல் (11.04.2013)



தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் மற்றும் சிரம வாசனா நிதியம் ஆகியவற்றின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களின் அங்குரார்ப்பணம் (08.02.2013)
(www.niosh.gov.lk , www.svf.gov.lk)

## தொழில், வெளிநாட்டுத் தொடர்புகள் பிரிவு

**பிரதான செயற்பாடுகள் :**

1. சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தற்போதிருக்கின்ற தொழில் சட்டங்களை திருத்துதல்.
2. புதிய சட்டவாக்கங்களைக் கொண்டுவருதலும், நிறுவனரீதியான மாற்றங்களை நடைமுறைப் படுத்துதல்.
3. தொழில் நிருவாகத்தை மேலும் பலப்படுத்துதல்.
4. சர்வதேச தொழில் தாபனம் மற்றும் முக்கியமான வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதல்.
5. அமைச்சின் அலுவலர்கள் மற்றும் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற நிறுவனங்களின் அலுவலர்களுக்கு வெளிநாட்டு பயிற்சிகளை ஒழுங்கமைத்தல்.

### 2012 ஒக்டோபர் 01 இலிருந்து 2013 செப்ரெம்பர் 30 வரையான செயற்பாடுகள்

இந்தப் பிரிவானது, பின்வருகின்ற தலைப்பின் கீழ் பயனுறுதிவாய்ந்த, ஆக்கத்திறனுள்ள பங்கினை நிறைவேற்றுகின்றது.

- சர்வதேச தொழில் தாபனம் உள்ளடங்கலான வெளிநாட்டுத் தாபனங்களுடன் இணைந்து செயற்படுதல்.
- சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தற்போதிருக்கின்ற தொழில் சட்டங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- புதிய சட்டங்களை வகுத்தமைத்தலும், நிறுவனம்சார் மாற்றங்களை ஏற்படுத்துதலும்.
- வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்காக தொழில் அமைச்சினதும், அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களின் அலுவலர்களைப் பங்குபற்றச் செய்வதற்கான நிருவாகச் செயற்பாடுகளைச் செய்தல்.

### (1). சர்வதேச தொழில் தாபனம் மற்றும் ஏனைய முக்கிய சர்வதேச தாபனங்களுடன் இணைந்து செயற்படுதல்

1. சர்வதேச தொழில் தாபன யாப்பு 22 ஆம், 25 ஆம் இலக்கங்களின் கீழ் சர்வதேச தொழில் தாபனத்திற்கு அனுப்பப்பட வேண்டிய அறிக்கைகளைத் தயாரித்தல் (இதன்படி இந்த ஆண்டில் 08 சமவாயங்கள் மீது அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன)

2. ஆகக்குறைந்த சம்பளத்தை நிறுவும் சமவாயம் ச 131 மற்றும் ஆகக்குறைந்த சம்பளத்தை நிறுவும் விதப்புரை வி 135 தொடர்பில் பொது ஆய்வினை செய்தலும், அதனை சர்வதேச தொழில் தாபனத்திற்குச் சமர்ப்பித்தலும். ***(Minimum Wage Fixing Convention C131 and Minimum Wage Fixing Convention and Recommendation C135)***

3. ஒன்றிணைவதற்கான சுதந்திர சமவாயத்தின் கீழ் ஒன்றிணைவதற்கான சுதந்திரம் தொடர்பான வழக்கொன்றிற்கு ச.தொ.தாபனத்திற்குப் பதிலளிக்கப்பட்டது.
***(Complaint made by Government Nursing Officers Association on Restriction of Right to strike and violation of principles of ILO Convention No 98-Sri lanka )***

4. சர்வதேச தொழில் நியமங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.
சர்வதேச தொழில் தாபனத்தின் 102 ஆவது அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி பின்வருகின்ற விபரங்ககளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தமை.

   விதப்புரைகள்

   அ. வி 202 – சமூகப் பாதுகாப்புத் தளம்

5. சர்வதேச தொழில் தாபனத்திற்கு ஆண்டுதோறும் அனுப்ப வேண்டிய இலங்கை தொழில் சந்தைத் தகவல் தொடர்பான தரவினைச் சமர்ப்பித்தல்.
(2013/2014 இற்கான தொழில் புள்ளிவிபரங்கள் மீதான ச.தொ.தா ஆண்டு குறிப்பேடு)
***(ILO Year Book on Labour Statistics for 2013/2014 )***

1.2 சர்வதேச தொழில் தாபனத்தின் அங்கத்துவ நாடாக பொறுப்புகளை நிறைவேற்றுதல்.

i. உலக உழைக்கும் மக்களின் நலன்புரிக்கான சர்வதேச தொழில் நியமங்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்ற சர்வதேச தொழில் தாபன மாநாட்டிற்கு முத்தரப்பு தூதுக்குழுவினை அனுப்புதல் அமைச்சின் இந்தப் பிரிவின் முக்கிய பங்காகும். இந்த மாநாடு ஒவ்வொரு ஆண்டும் யூன் மாதத்தில் ஜெனிவாவில் நடத்தப்படுகின்றது. இந்த வருடமும் 102 ஆவது அமர்வினைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு முத்தரப்பு தூதுக்குழுவொன்று பங்குபற்றியிருந்தது.

ii. சர்வதேச தொழில் தாபனத்தின் 317 ஆவது ஆளுங்குழு அமர்வு 2013 மார்ச்சில் நடைபெற்றதுடன், அதற்கு பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதே போன்று 2013 ஒக்டோபர் 310 ஆவது ஆளுங்குழு அமர்விலும் பங்குபற்றியமை.

iii. 2013 ஒக்டோபர் 8-10 வரை சிறுவர் ஊழியம் தொடர்பில் 3 ஆவது உலக மாநாடு பிரேசல் பிறாசீலியாவில் நடத்தப்பட்டது.

**(2) சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தற்போதிருக்கின்ற தொழில் சட்டங்களைத் திருத்துதல்**

தற்போதிருக்கின்ற தொழில் சட்டங்களைத் திருத்துவதற்கும், புதிய சட்டங்களை வகுத்தமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

2.1 ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கையை எடுத்தல்.

## ஏனைய செயற்பாடுகள்

அ). இந்தப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகள் வெளி விவகார அமைச்சிற்கு அனுப்புவதற்குத் தயாரிக்கப்படுகின்ற அறிக்கைகளைத் தொகுத்தலாகும். இதன்படி, 2013 சனவரியிலிருந்து இன்று வரையான காலப்பகுதியில் பின்வருகின்ற அறிக்கைகள் தொகுக்கப்பட்டிருந்தன.

- “பொருளாதார சமூக, கலாசார உரிமைகள் மீதான சர்வதேச கூட்டுஒப்பந்தம் - 5 ஆவது காலாந்தர அறிக்கை” தொடர்பான அறிக்கை. (2 ஆவது காலாண்டு 2013).
- “சட்டத்தில் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டு விடயம் மீது பணிபுரிகின்ற குழுமம்” என்பதனால் எழுப்பப்படுகின்ற வினா. (1 ஆவது காலாண்டு 2013)
- “சிறுவர்களின் உரிமை” என்ற GA தீர்மாதனங்களை நடைமுறைப்படுத்துதல் (1 ஆவது காலாண்டு 2013).
- மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மீதான இடை விவாதம்” (1 ஆவது காலாண்டு 2013).
- “மனித உரிமைகள், நாடுகடந்த கூட்டுத்தாபனம் மற்றும் வியாபார தொழில் முயற்சிகள் மீது பணிபுரியும் குழுமம்” என்பதனிடமிருந்தான வினா. (1 ஆவது காலாண்டு 2013).

02. இலங்கை மனித உரிமைகளின் வழிகாட்டி மீதான அறிக்கையின்படி தொழில், தொழில் உறவுகள் அமைச்சுடன் தொடர்புபட்ட அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றங்களை உரிய அமைச்சிற்கு மாதாந்த அறிக்கைகளை வழங்குதல்.

03. சர்வதேச தொழில் தாபனத்துடன் இணைந்து “தொழில் மற்றும் சமூகப் போக்கு அறிக்கை” என்பதன் முறைப்பாடுகளின் தொகுதி II இனைத் தொகுத்தல் மற்றும் அதனை முத்தரப்பினரின் பங்கேற்புடன் வெளியிடுதல்.

04. தேசிய தொழில் ஆலோசனைச் சபையின் செயற்பாடுகளை முறைமையாக்குவதற்கு சட்ட ஒழுங்குகளை வகுத்தமைப்பதற்காக உப குழுக்களைத் தாபித்தல்.

05. வெளிநாட்டு புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைச்சினதும், அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களினதும் அலுவலர்களைப் பங்குபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி 2012 ஒக்டோபர் முதல் 2013 செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் 15 அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர்.

06. அமைச்சுடன் தொடர்புபட்ட நிறுவனங்களின் புலமைப்பரிசில்கள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றச் செய்வது அமைச்சின் பிரதான பங்காகும்.

07. வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களுக்குத் தெரிவு செய்வதற்கு உரிய அலுவலர்களின் தகவல்கள் மிகவும் வெளிப்படையாகக் கணினிமயப்படுத்தப்பட்டு தரவுத் தளத்தைத் தயாரித்தல்.

08. வெளிநாட்டு புலமைப்பரிசில்கள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியிருந்த அலுவலர்களின் தகவல்களைக் கணினிமயப்படுத்தி, அது தொடர்பான தகவல்களை நாளது வரைப்படுத்தி தரவுக் தளத்தைப் பேணுதல்.

**2013 செப்ரெம்பர் முதல் டிசெம்பர் வரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்**

- சீன மக்கள் குடியரசுடன் தொழில் துறை தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவராக 2013 நவம்பர் 23-25 வரை பயிற்சிப்பட்டறையொன்று நடத்தப்படும். (Cooperation in the field of Labour, Chinese delegation visit to Sri Lanka)

- “தொழில் மற்றும் சமூகப் போக்கு அறிக்கை” என்பதன் முறைப்பாடுகளின் தொகுதி III இனைத் தொகுப்பதற்கான ஆரம்ப கூட்டத்தை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- பின்வருகின்ற 2 அறிக்கைகள் தொடர்பில் சர்வதேச தொழில் தாபனத்திற்கு பதிலளிக்க வேண்டும்.

  1. வலுக்கட்டாயத் தொழிலை முடிவுறுத்துவதற்கான செயல்களைப் பலப்படுத்துதல்
  2. முறைசாரா பொருளாதாரத்தை முறைசார் பொருளாதாரத்திற்கு மாற்றுதல்

**2014 ஆம் ஆண்டு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்**

- சர்வதேச தொழில் தாபனத்தின் 19, 22 மற்றும் 35 ஆம் இலக்கத்தின் கீழ் சர்வதேச தொழில் தாபனத்திற்கு வருடாந்தம் அனுப்ப வேண்டிய அறிக்கைகளை உருவாக்குதல்.ஆகவே, 2014 ஆம் ஆண்டுக்காக 08 சமவாயங்கள் தொடர்பில் அறிக்கைகள் உருவாக்கப்படுகின்றன.

  2013 ஆம் ஆண்டுக்காக பின்வருகின்ற சமவாயங்கள் மற்றும் விதப்புரைகளுக்கு 2 அய்வு அறிக்கைகளுக்கான பதில்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

  1.ஒன்றுகூடுவதற்கான உரிமை (கமத்தொழில்) சமவாயம்,1921 (இல. 11)
  2.கிராமிய வேலையாட்களின் தாபனங்கள் சமவாயம்,1975 (இல 141)
  3. கிராமிய வேலையாட்களின் தாபனங்கள் விதப்புரை,1975 (இல 149)

- சர்வதேச தொழில் தாபனத்துடன் இணைந்து “தொழில் மற்றும் சமூகப் போக்கு அறிக்கை” என்பதன் முறைப்பாடுகளின் தொகுதி II இனைத் தொகுத்தல் மற்றும் அதனை முத்தரப்பினரின் பங்கேற்புடன் வெளியிடுதல்.

- வருடாந்த சர்வதேச தொழில் தாபனத்தின் மாநாட்டில் பங்குபற்றுவதற்கு முத்தரப்புப் பிரதிநிதிகளை ஏற்படுத்துதல்.

- முத்தரப்புப் பிரதிநிதித்துவம் மற்றும் தொழில் துறை தொடர்பான உரிய கொள்கைகளை வகுத்தமைப்பதற்குத் தேவையான சமூக சம்பாஷணைச் செய்வதற்காக மாதாந்தம் தேசிய தொழில் ஆலோசனைச் சபையின் கூட்டத்தின்படி புதிய தொழில் சட்டங்களை வகுத்தமைத்தல்.

- புதிய தொழில் சட்டங்களை வகுத்தமைத்தலும், நிறுவனம்சார் மாற்றங்களைச் செய்வதற்கு தேவையான ஆரம்ப செயல்களை வழங்குதலும்.

- அமைச்சுடன் தொடர்புபட்ட நிறுவனங்களின் அலுவலர்களை புலமைப்பரிசில்கள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்குபற்றச் செய்வதனை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- இலங்கையில் தொழில் சட்டங்களைப் பயன்படுத்துதலும், தொழில் துறையுடன் தொடர்புபட்ட விடயங்கள் மீது ஆராய்ச்சிகளை நடத்துதலும். (இங்கே தொழில் சட்டவாக்கங்கள், வேலையாளர்களின் உரிமைகள் மற்றும் வேலையாளர்களின் பாதுகாப்பு மீது கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்).

- இலங்கையின் தொழில் சந்தையின் போக்கு மீது செய்தி மடலை மாதத்திற்கு இரண்டு முறை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.






**சர்வதேச தொழில் தாபனத்தின் 101 ஆவது அமர்வில் (2012 யூலை)**
**கௌரவ அமைச்சர் உரையாற்றுகின்றார்**





**தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிறுவகம் தொடர்பான சமவாயத்தை**
**ஏற்று அங்கீகரிப்பதற்கான பயிற்சிப்பட்டறை கௌரவ அமைச்சரினால் அங்குரார்ப்பணம் (2013 யூன்)**

# திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

## 2013 செயலாற்றுகை

அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான திட்டங்களை சரியான இலக்குகளை நோக்கித் தயாரித்தல், இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தச் செய்து, முன்னேற்ற மீளாய்வு மற்றும் தொடர் நடவடிக்கைகளை எடுத்தல். இதற்கு மேலதிகமாக பின்வருகின்ற செயற்பாடுகள் இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களின் இலக்குகளை விருத்தி செய்வதுடன்கூடிய வருடாந்த நடைமுறைப்படுத்தும் திட்டங்களை தயாரித்தல் மற்றும் இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய தரப்பினருக்குப் பணித்தல்.
    - முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பெறுபேறின் கீழ் வருடாந்த நடைமுறைப்படுத்தல் திட்டத்தைத் தயாரித்து, முன்னேற்றத்தை மதிப்பிட்டமையும் மற்றும் 2013 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டின் இறுதியில் முன்னேற்றம் **59%** ஆகும்.
- நிதி அமைச்சு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து முன்னேற்ற அறிக்கைகளை காலாந்தரங்களில், ஆண்டிற்ககு இருமுறை மற்றும் வருடாந்தம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- இலங்கை தொழிற் செய்திமடல், மே தினப் பிரகடனம் மற்றும் அமைச்சின் ஏனைய அனைத்து வெளியீடுகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.
    - இலங்கை தொழில் செய்திமடல் பகுதி 63 –தொகுதி 2,3,4, பகுதி 64 – தொகுதி 1 மற்றும் 2 இனை காலாண்டின் அடிப்படையில் பிரசுரித்தல்.
- சீரிய வேலை தொடர்பில் தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துதலும், அதன் முன்னேற்ற ஆய்வினை நடத்துதலும்.
    - சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளுக்கு 27 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2013 செப்ரெம்பர் 30 இலுள்ளவாறான முன்னேற்றம் பின்வருமாறு:

| கருத்திட்டத்தை செயற்படுத்தும் நிறுவனங்களின் பெயர் | ஒதுக்கீடுகள் (மில்லியன்) | செப்ரெம்பர் 30 வரையான முன்னேற்றம் (மில்லியன் ) | % |
|---|---|---|---|
| தொழில் திணைக்களம் | 11.734 | 5.88 | 50.11 |
| தொழில் கற்கைகள் நிறுவகம் | 2.323 | 0.142 | 6.11 |
| கருத்திட்டச் செயலகம் | 6.322 | 1.89 | 30 |
| தொழில்,தொழில் உறவுகள் பிரிவு | 4.121 | 0.48 | 11.64 |
| தொழில்,வெளிநாட்டு தொடர்புகள் பிரிவு | 1.2 | 0 | 0 |
| தொழில் திணைக்களம் | 1.0 | 0 | 0 |
| தொழில் கற்கைகள் நிறுவகம் | 0.3 | 0 | 0 |
| **மொத்தம்** | **27** | **8.392** | **31.08** |

இதன்படி, 2013 செப்ரெம்பர் 30 இல் முன்னேற்றம் **31%** ஆகும். அடுத்த காலாண்டில் எதிர்பார்க்கப்பட்டுள்ள முன்னேற்றம் 100% ஆகும்.

- அமைச்சின் தரவுத்தள முறைமையை பேணுதலும், அரசாங்க வலையமைப்பு முறைமையை நடைமுறைப்படுத்தல், 1919 குறுந் தகவல் முறையையும் மற்றும் அமைச்சின் இணையத்தளத்தையும் நாளதுவரைப்படுத்துதல்.
- தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் www.labourmin.gov.lk. அலுவலக இணையத்தளத்தை நாளது வரைப்படுத்துதலும், பேணுதலும்.
- பாராளுமன்றத்தின் வரவுசெலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தல்.
- தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சியும், ஒருங்கிணைப்பும் மற்றும் இதற்கு இணையான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும்.

# நிருவாகம் மற்றும் தாபனப் பிரிவு

நிருவாகப் பிரிவு, தாபனப் பிரிவு மற்றும் ஊடக அலகு என்பன நிருவாகம் மற்றும் தாபனப் பிரிவிற்குள் உள்ளடக்கப்படுகின்றது. நிருவாகப் பிரிவிற்கு, வழமையான நிருவாகம், பெறுகைகள், முகாமைத்துவம், பராமரிப்பு, பயிற்சி மற்றும் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் போன்ற அத்தகைய பல பொறுப்புக்கள் உரித்தளிக்கப் பட்டுள்ளன. தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் மனித வள முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகள் தாபனப் பிரிவினால் ஆற்றப்படுகின்றன. தாபனப் பிரிவு, பொது மக்களால் மற்றும் பாராளுமன்ற வினாக்கள், பொது மக்கள் மனுக் குழு, ஆலோசனைக் குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற அத்தகைய நிறுவனங்களினால் அனுப்பப்படுகின்ற மனுக்கள் மற்றும் வேண்டுகோள்கள் தொடர்பிலான செயற்பாடுகளை ஆற்றுகின்றது.

அமைச்சின் ஊடக அலகு, அமைச்சினால் மற்றும் அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களினால் ஆற்றப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை பொதுமக்கள் மற்றும் ஊடக அமைப்புக்களுக்கு அறியச்செய்வதற்கான செயற்படுகளை நிறைவேற்றுகின்றன. இச் செயற்பாடுகள் மேலதிக செயலாளரின் பரிசீலனையின் கீழ், சிரேஷ்ட உதவிச் செயலாளரின் (நிருவாகம்), உதவிச் செயலாளரின் (தாபனம்) மற்றும் நிருவாக அலுவலரின் மேற்பார்வையின் கீழ் நிறைவேற்றப்படுகின்றன.

## 2013 ஆம் ஆண்டில் முன்னேற்றம்

### ❖ பெறுகைச் செயற்பாடுகள்

இந்த அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற பிரிவுகளிலும் நிறுவனங்களிலும் அரசாங்க நடைமுறையில் பயனுறுதிவாய்ந்த, உற்பத்தித்திறன்சார் பெறுகைச் செயற்பாடுகளை நிறைவேற்று வதனூடாக உரிய நிறுவனங்களில் உடனடியாக அனைத்துப் பெறுகைச் செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. தொழில் திணைக்களத்திற்கான மேஹெவர பியஸ தொடர் அலுவலகக் கட்டடத்தொகுதியின் நிருமாணம் தொடர்பில் அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினது ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் இந்தப் பிரிவிற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது.

### ❖ மனித வள அபிவிருத்தி

இந்தப் பிரிவு, அமைச்சினதும், அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களின் அலுவலர்களுக்கு தமிழ் மொழி ஆற்றலைச் செம்மைப்படுத்துவதற்காக அரசகரும மொழிகள் திணைக்களத்துடன் இணைந்து மொழிப் பாடநெறிகளை ஒழுங்கமைத்துள்ளது. இந்தப் பிரிவு, அமைச்சு அலுவலர்களுக்கு அவர்களது சேவையின் நிமித்தம் பட்டப்பிற்கல்வி மற்றும் டிப்புளோமாவினை கற்பதற்கு நிதி உதவி உள்ளடங்கலான வசதிகளை வளங்கியுள்ளது.

### ❖ நலனோம்பல் செயற்பாடுகள்

பணியாளர்களின் நலனோம்பல் செயற்பாடுகளை செம்மைப்படுத்துவதனூடாக, இந்தப் பிரிவு, கணக்குப் பிரிவின் ஒத்துழைப்புடன் அனைத்துக் கடன் விண்ணப்பதாரிகளும் நீண்ட காலமாகக் காத்திருக்கையில் குறைந்த காலப்பகுதியில் அனர்த்த கடன் தேவைகளை காத்திருப்புப் பட்டியலின்றி அனர்த்த கடன் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அனர்த்த கடன்கள் கொடுப்பனவை ஒழுங்கமைத்திருந்தது.

### ❖ வைபவங்கள் மற்றும் ஏனைய தேசிய நிகழ்வுகளை ஒருங்கிணைத்தலும் ஒழுங்கமைத்தலும்

நிருவாகம் மற்றும் தாபனப் பிரிவு, சனவரி 01 வைபவம், மே தின வைபவம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தினம் அத்துடன் உலக சிறுவர் தின நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைப்பதில் பங்களிப்பை நல்கியுள்ளன.

### ❖ பாராளுமன்றச் செயற்பாடுகள்

நிருவாகம் மற்றும் தாபனப் பிரிவு 2012 ஆம் ஆண்டில் பாராளுமன்ற மற்றும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்ட வினாக்களுக்குப் பதிலளித்தல் செயற்பாடுகளை ஆற்றியுள்ளன. இந்தப் பிரிவுகள், சனாதிபதிச் செயலகத்தினால் நாளாந்தம் உரிய பிரிவுகளுக்கு அனுப்பப்படுகின்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு மக்களுக்கு ஆதரவளிப்பதற்காக சேவையாற்றியுள்ளன.

❖ **அமைச்சின் அதிகாரத்தின் கீழ்வருகின்ற நிறுவனங்களின் நிறுவனம்சார் செயற்பாடுகள்**

புதிதாகத் தாபிக்கப்பட்ட தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மற்றும் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் என்பற்றிற்கான நிலை முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றிற்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் தயாரித்ததன் பின்னர் பதவியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## நிதிப் பிரிவு

**2013செயலாற்றுகை**
**2013 சனவரி முதல் செப்ரெம்பர் வரையான செயலாற்றுகை அறிக்கை**
**தலைப்பு : 127**

| நிகழ்சித்திட்டம் | கருத்திட்டம் | செலவினத்தின் வகை | ஒதுக்கீடு (ரூபா) | செலவினம் (ரூபா) | சேமிப்புக்கள் (ரூபா) | செலவினத்தின் வீதம் % |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | மீண்டெழுவது | 31,810,000 | 21,681,358 | 10,128,642 | 68 |
| | | மூலதனம் | 12,650,000 | 11,336,898 | 1,313,102 | 90 |
| | | **மொத்தம்** | **44,460,000** | **33,018,256** | **11,441,744** | **74** |
| | | | | | | |
| 1 | 2 | மீண்டெழுவது | 48,625,000 | 30,602,116 | 18,022,884 | 63 |
| | | மூலதனம் | 34,400,000 | 7,857,046 | 26,542,955 | 23 |
| | | **மொத்தம்** | **83,025,000** | **38,459,162** | **44,565,839** | **46** |
| | | | | | | |
| 2 | 3(2) | மீண்டெழுவது | 23,000,000 | 10,802,490 | 12,197,510 | 47 |
| | | மூலதனம் | 5,000,000 | 2,573,152 | 2,426,848 | 51 |
| | | **மொத்தம்** | **280,000,000** | **13,375,642** | **14,624,358** | **48** |
| | | | | | | |
| 2 | 3(3) | மீண்டெழுவது | 4,000,000 | 1,790,155 | 2,209,845 | 45 |
| | | மூலதனம் | 6,000,000 | 1,598,085 | 4,401,915 | 27 |
| | | **மொத்தம்** | **10,000,000** | **3,388,240** | **6,611,760** | **34** |
| | | | | | | |
| 2 | 4 | மீண்டெழுவது | 41,595,000 | 32,783,680 | 8,811,320 | 79 |
| | | மூலதனம் | 1,140,000 | 290,851 | 849,149 | 26 |
| | | **மொத்தம்** | **42,735,000** | **33,074,531** | **9,660,469** | **77** |
| | | | | | | |
| 2 | 5 | மீண்டெழுவது | 20,525,000 | 12,109,738 | 8,415,262 | 59 |
| | | மூலதனம் | 845,000 | 267,034 | 577,966 | 32 |
| | | **மொத்தம்** | **21,370,000** | **12,376,772** | **8,993,228** | **58** |

இந்தப் பிரிவு, வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகள், அரச அலுவலர்களின் "பி" முற்பணக் கணக்கு, கட்டுநிதிக் கணக்கு, பொது வைப்புக் கணக்கு என்பவற்றைச் சமர்ப்பித்துள்ளன.

| | ஒதுக்கீடு (ரூபா.மில்.) | செலவினம் 2013 செப்ரெம்பர் 30 இல் (ரூபா.மில்.) | % |
|---|---|---|---|
| மூலதனச் செலவினம் | 60 | 23.9 | 40 |
| மீண்டெழும் செலவினம் | 169.5 | 111.4 | 66 |
| **மொத்தம்** | **229.5** | **135.3** | **59** |

## கருத்திட்டச் செயலகம்

இந்தப் பிரிவு, 2004 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பால்சார் சமத்துவ ஆய்வின் பரிந்துரைகளுக் கமைவாக 2008 ஆம் ஆண்டில் ஜெண்டர் பணியகமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது 2012 ஆம் ஆண்டில் கருத்திட்டச் செயலகமாக விரிவுபடுத்தப்பட்டிருந்தது. இந்த அலுவலகமானது தொழில், தொழில் உறவுகள் மேலதிகச் செயலாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் நடைமுறைமுறைப் படுத்தப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியல் கருத்திட்டச் செயலகத்தினூடாக பின்வருகின்ற 03 பிரதான கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

- தொழில் உலகத்தில் பால்சார் சமத்துவம் மீதான கருத்திட்டம்
- தொழில் உலகத்தில் எச்.ஐ.வி/எயிட்ஸிற்கு எதிரான கருத்திட்டம்
- மாற்றுத்திறனாளிகளைப் பணிக்கமர்த்துதல் கருத்திட்டம்.

## தொழில் உலகத்திற்கான ஜெண்டர் பணியகம்

சர்வதேச தொழில் தாபனத்துடனான நெருங்கிய ஒருங்கிசைவுடன் 2013 இல் நடைமுறைப்படுத்தி சீரிய வேலை மற்றும் பால்சார் சமத்துவ கருத்திட்டச் செயற்பாடுகள்

**சீரிய வேலை நிகழ்ச்சிநிரலில் பால்சார் சமத்துவம் மற்றும் தொழில் உறவுகள் தொடர்பில் பயிற்சியாளர்களுக்கான பயிற்சிக்குரிய பயிற்சிப்பட்டறை**

| பயிற்சிப்பட்டறை/ பயிற்சி | ஆரம்பிக்கப்பட்டது | இடம் | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| 35 தொழில் அலுவலர்களுக்குரிய பயிற்சியாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை | 22னெ ஆயசஉா 2013 யனெ 23சன | ஹேக்டர் கொபே கடுவ நீர்ப்பாசன ஆராய்சி, பயிற்சி நிறுவகம் | சர்வதேச தொழில் தாபனத்தின் அனுசரணை |
| 35 தொழில் அலுவலர்களுக்குரிய பயிற்சியாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை | 2013 மார்ச் 22 மற்றும் 23 | திலங்க ஹொட்டல், கண்டி | சர்வதேச தொழில் தாபனத்தின் அனுசரணை |
| 35 தொழில் அலுவலர்களுக்குரிய பயிற்சியாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை | 2013 மே 2 மற்றும் 3 | இலங்கை ஆதாரமன்றம்,கொழும்பு | சர்வதேச தொழில் தாபனத்தின் அனுசரணை |
| 35 தொழில் அலுவலர்களுக்குரிய பயிற்சியாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவம் | 2013 யூலை 29 மற்றும் 30 | சவறீன் ஹொட்டல், கொழும்பு | சர்வதேச தொழில் தாபனத்தின் அனுசரணை |

**தொழில் உலகத்தில் உயர் தொழில் உற்பத்தித்திறனுக்கான சீரிய வேலை மற்றும் பால்சார் சமத்துவம் - 2013 கருத்திட்டம்**

**01. பயிற்சிப்பட்டறை/ பயிற்சி**

| பயிற்சிப்பட்டறை/ பயிற்சி | ஆரம்பிக்கப்பட்டது | இடம் | பங்குபற்றியவர்களின் எண். | |
|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் |
| உயர் தொழில் உற்பத்தித்திறனுக்கான சீரிய வேலை மற்றும் பால்சார் சமத்துவம் | 05.28.2013 | கட்டுநாயக்கா முதலீட்டுச் சபை கேட்போர்கூடம் | 40 | 65 |
| உயர் தொழில் உற்பத்தித்திறனுக்கான சீரிய வேலை மற்றும் பால்சார் சமத்துவம் | 21.06. 2013 | மனித வளங்கள் அபிவிருத்தி நிலையம், திருகோணமலை | 32 | 57 |
| உயர் தொழில் உற்பத்தித்திறனுக்கான சீரிய வேலை மற்றும் பால்சார் சமத்துவம் | 22.06. 2013 | மனித வளங்கள் அபிவிருத்தி நிலையம், திருகோணமலை | 27 | 33 |
| உயர் தொழில் உற்பத்தித்திறனுக்கான சீரிய வேலை மற்றும் பால்சார் சமத்துவம் | 08.06.2013 | கட்டுநாயக்கா முதலீட்டுச் சபை கேட்போர்கூடம் | 29 | 31 |
| உயர் தொழில் உற்பத்தித்திறனுக்கான சீரிய வேலை மற்றும் பால்சார் சமத்துவம் | 08.08.2013 | கட்டுநாயக்கா முதலீட்டுச் சபை கேட்போர்கூடம் | 22 | 54 |
| உயர் தொழில் உற்பத்தித்திறனுக்கான சீரிய வேலை மற்றும் பால்சார் சமத்துவம் | 15.08.2013 | கட்டுநாயக்கா முதலீட்டுச் சபை கேட்போர்கூடம் | 31 | 60 |
| உயர் தொழில் உற்பத்தித்திறனுக்கான சீரிய வேலை மற்றும் பால்சார் சமத்துவம் | 26.09.2013 | தொழிற் செயலகம், கொழும்பு. | 21 | 15 |

### 02: சீரிய வேலை மற்றும் தொழில் உறவுகள் மீதான உணர்வினை அதிகரித்தல்

**சீரிய வேலை மீதான சித்திரப் போட்டி - 2013**

தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் தொழில் உலகத்திற்கான சீரிய வேலைக் கருத்திட்டத்தின் செயற்பணி, அபிவிருத்திச் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்கின்ற ஊழியர் படையில் ஆண்கள் மற்றும் பெண்களின் சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒருங்கிசைவான இக்கருத்திட்டம் இலங்கையில் உழைக்கும் மக்களின் அறிவினைச் செம்மைப்படுத்தும் நோக்கில் பால்சார் சமத்துவம் தொடர்பான பதாதைப் போட்டியொன்றும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

### 03: சீரிய வேலை, பால்நிலை மற்றும் தொழில் உறவுகள் பற்றிப் பதியவைக்கின்ற பயிற்சிப்பட்டறை

| இல. | பயிற்சிப்பட்டறை/ பயிற்சி | ஆரம்பிக்கப்பட்டது | இடம் | பங்குபற்றியவர்களின் எண். | |
|---|---|---|---|---|---|
| | | | | ஆண் | ஆண் |
| 01 | வேலைத்தலத்தில் சீரிய வேலை,பால்நிலை மற்றும் தொழில் உறவுகள் | 28.07.2013 | பொனறுவை | - | 31 |
| 02 | வேலைத்தலத்தில் சீரிய வேலை,பால்நிலை மற்றும் தொழில் உறவுகள் | 10.08. 2013 | மதிரிகிரி ரெக்ஸ்ரைல்,குளோதிங் | 02 | 18 |
| 03 | வேலைத்தலத்தில் சீரிய வேலை,பால்நிலை மற்றும் தொழில் உறவுகள் | 01.08. 2013 | களவண சிசிலியன் தேயிலை தொழிற்சாலை | 07 | 33 |
| 04 | வேலைத்தலத்தில் சீரிய வேலை,பால்நிலை மற்றும் தொழில் உறவுகள் | 30.08.2013 | குறுவிட்ட பரடைஸ் ஹிரமாணி கம்பனி | 09 | 26 |
| 05 | வேலைத்தலத்தில் சீரிய வேலை,பால்நிலை மற்றும் தொழில் உறவுகள் | 05.09.2013 | நிவிதிகலை பிரண்டிக்ஸ் கசுவல் கம்பனி | - | 27 |
| 06 | வேலைத்தலத்தில் சீரிய வேலை,பால்நிலை மற்றும் தொழில் உறவுகள் | 07.09.2013 | காலி | 16 | 18 |
| 07 | வேலைத்தலத்தில் சீரிய வேலை,பால்நிலை மற்றும் தொழில் உறவுகள் | 13.09.2013 | ஜேலி ஓயா | - | 47 |

# தொழில் திணைக்களம்

1923 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இந்திய குடிவரவுக் கட்டளைச் சட்டத்திற்கமைவாக ஆரம்பிக்கப்பட்டிருந்த தொழில் திணைக்களத்தின் ஆரம்பமானது 1923 ஆம் ஆண்டுவரை பின்னோக்கிச் செல்கின்றது. இத்திணைக்களம், இலங்கைச் சட்டவாக்கம், இலங்கையில் உழைக்கும் மக்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரிக்காக கடந்த 90 ஆண்டு காலப்பகுதியில் சுமார் 50 சட்டமூலங்களை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், தொழில் திணைக்களத்தின் பிரதான செயற்பாடு, அங்கீகரிக்கப்பட்ட இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதாகும். இந்த நோக்கங்களுக்காக இத்திணைக்களம், திணைக்களத்தின் 13 பிரிவுகள், 11 வலய தொழில் அலுவலகங்கள், 56 மாவட்ட, உப தொழில் அலுவலகங்கள் மற்றும் 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்களைத் தொழிற்படுத்துகின்றது.

## தொழில் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகள்

- நாட்டில் தொழிற்றுறை அமைதியைப் பேணுவதற்காக தொழில் சட்டங்களை வினைப்படுத்து வதனூடாக கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்.

- நாட்டில் தொழிற்றுறை அமைதியைத் தாபிப்பதற்காக தொழில் சட்டங்கள் தொடர்பாக உழைக்கும் சமூகத்தினரிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் சமூகக் கலந்துரையாடலை மேம்படுத்துதல்.

- தொழிற்றுறையுடன் தொடர்புபட்ட தொழில் நியமங்களை நடைமுறைப்படுத்துதல், புதிய தொழிற்றுறை தொடர்பில் ஆய்வினை நடத்துதல் மற்றும் அந்த தொழிற்றுறைகளுக்கு சர்வதேச நியமங்களுக்கமைவாக நியமங்களை உருவாக்குதல்.

- ஊழியர் சேமலாப நிதியத்தை மேம்படுத்துதல், அதன் நன்மைகளை உறுப்பினர்களுக்கு வழங்குதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமலாப நிதியங்களை மேற்பார்வையிடுதல்.

- தொழிலிலுள்ள சிறுவர், பெண்கள் மற்றும் இளம் நபர்களைப் பாதுகாப்பதற்கு உரிய சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

- தொழிற்றுறையில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்துவதற்குப் பின்பற்ற வேண்டிய முறைகளை அறிமுகப்படுத்துதலும், விழிப்புணர்வினை ஏற்படுத்துதலும், இதனை மேற்பார்வை யிடுதலும்.

# தொழில் திணைக்களத்தின் நிருவாகக் கட்டமைப்பு



## கைத்தொழில் தொடர்புகள் பிரிவு

கைத்தொழில் தொடர்புகள் பிரிவு பின்வருகின்ற சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

- 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில்' பிணக்குகள் சட்டம்
- 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பணி முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடு) சட்டம்
- 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தொழிற் சங்கக் கட்டளைச் சட்டம்
- 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டம்

இந்தச் சட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு இந்தப் பிரிவானது எணணிக்கை யிலான பிரதான அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

- கைத்தொழில் தொடர்புகள் பிரிவு
- பணி முடிவுறுத்தல் பிரிவு
- தொழிற் சங்க அலகு
- சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைவாய்ப்புப் பிரிவு

தொழில் திணைக்களத்தின் கைத்தொழில் தொடர்புகள் பிரிவு, கைத்தொழில் பிணக்குகளைத் தீர்க்கின்ற செயன்முறையினை ஆற்றுகின்றது. இந்த விடயத்திற்காக உரிய செயன்முறையானது, 11 வலய தொழில் அலுவலகங்கள், 39 மாவட்ட தொழில் அலுவலகங்கள், 18 உப தொழில் அலுவலகங்களினூாக பரவலாக்கப்பட்டுள்ளது. மாவட்ட, உப தொழில் அலுவலகங்கள் தொழில் பிணக்குகளைத் தீர்க்கின்றன. தீர்க்கப்படாத கைத்தொழில் பிணக்குகளே அதனகத்துள்ள தேவையான பரிந்துரைகளுடன் கைத்தொழில் தொடர்புகள் பிரிவிற்கு அனுப்பப்படுகின்றன. உரிய இந்த கைத்தொழில் பிணக்குகளை ஆய்வு செய்தத்ன பின்னர் தொழில் ஆணையாளர் அதிபதி தேவையான செயற்பாடுகள் பற்றித் தீர்மானிக்கின்றார். ஆவ்வாறு தொழில் ஆணையாளரினால் தீர்மானமெடுக்கப்பட முடியாத கைத்தொழில் பிணக்குகள் நடுத்தீர்ப்பிற்கு விடப்படுகின்றன. இந்நோக்கத்திற்காக உதவித் தொழில் ஆணையாளர், பிரதித் தொழில் ஆணையாளர், சிரேஷ்ட தொழில் அலுவலர்கள் மற்றும் தொழில் அலுவலர்கள் உள்ளடங்கலான அலுவலர்கள், கைத்தொழில் தொடர்புகள் பிரிவின் தொழில் ஆணையாளரின் ஆலோசனையின் கீழ் செயற்படுகின்றனர்.

### 2013,செப்ரெம்பர் 31 ஆம் திகதியிலிருந்து இந்தப் பிரிவின் பிரதான செயற்பாடுகளின் முன்னேற்றம்

- தீர்க்கப்பட்ட கைத்தொழில் பிணக்குகள் 1698
- நடுத்தீர்ப்பிற்கு விடப்பட்டவை 38
- கூட்டு உடன்படிக்கைகளின் பதிவு 24

### தொழில் முடிவுறுத்தல் பிரிவின் முன்னேற்றம்

| | 2012.10.01 இல் மீதி | 01/10/2012 முதல் 30/09/2013 வரை பெற்றுக்கொண்ட எண். | 01/10/2012 முதல் 30/09/2013 வரை யான முன்னேற்றம் | 2013.09.30 இல் மீதி |
|---|---|---|---|---|
| விண்ணப்பங்கள் | 17 | 43 | 44 | 16 |
| முறைப்பாடுகள் | 104 | 116 | 129 | 91 |

### 01/10/2012 முதல் 30/09/2013 வரை

- கணக்கிடப்பட்ட நட்டஈட்டுத் தொகை 132,104,334/- ரூபா
- கொடுப்பனவு செய்யப்பட்ட நட்டஈட்டுத் தொகை 145,504,769.21/-ரூபா
- வழக்கு மூலம் அறவிடப்பட்ட தொகை 55,742,578.69 ரூபா

**கைத்தொழில் நீதிமன்றங்கள்**

உரிய ஆண்டு காலப்பகுதியில் 40 வழக்குகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது 159 வழக்குகள் தொடரப்படுகின்றன.

**தொழிற் சங்க அலகு (2012 ஒக்டோபர் 01 முதல் 2013 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை)**

- தொழிற் சங்கங்களின் புதிய பதிவுகள் 115
- செயற்படாத கம்பனிகளென உறுதிப்படுத்தப்பட்டு செல்லுபடியற்றதாக்கியவை 35

## சமூகக் கலந்துரையாடல் பிரிவு

**முன்னேற்றம்**

| | 2012 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் | 2013 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டில் |
|---|---|---|
| சமூகக் கலந்துரையாடல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 53 | 210 |
| மாவட்ட, வலய ஆலோசனைக் குழுக் கூட்டங்களை நடத்துதல் | 11 | 55 |
| பயிற்சியாளருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 1 | - |
| "சமூகக் கலந்துரையாடல்" சஞ்சிகையின் வெளியீடு (தொகுதிகளின் எண்.) | 1 | 3 |
| சமூகக் கலந்துரையாடல் தொடர்பில் நாடளாவியரீதியில் போட்டியை நடத்துதல் | 1 | - |

2013 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில், குருணாகலில் தேசத்திற் மகுடம் கண்காட்சிக்கு இணையாக 04 விசேட சமூகக் கலந்துரையாடல் மேம்பாட்டு பயிற்சிப்பட்டறைகளை நடத்துவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டுக்காக சமூகக் கலந்துரையாடல் மீதான நாடளாவியரீதியிலான போட்டியின் இறுதி வைபத்தை நடத்துவதற்கு உத்தேசிக்கப்படுகின்றது. இந்த போட்டியை 2014 ஆம் ஆண்டில் பரந்தளவில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## தொழில் தரப் பிரிவு

தனியார் துறையில், தொழில் பாதுகாப்பு மற்றும் பணியாளர்களின் சேமநலன்களைப் பாதிக்கின்ற சேவை நிபந்தனைகள் மற்றும் நியதிகள் தொடர்பில் நியமங்களை வகுத்தமைப்பதற்கும், தொழில் திணைக்களத்தின் தொழில் தரப் பிரிவினால் அவற்றிற்கு சட்ட அந்தஸ்தை வழங்குவதற்கும் பின்வருகின்ற சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1. 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்.
2. 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் காரியாலய ஊழியர் சேவைகள், சம்பளங்கள் ஒழுங்கமைப்பு) சட்டம்.
3. 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஊழியர்களுக்கான வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டம்.

தொழில் தரப் பிரிவின் பிரதான செயற்பாடுகள், சம்பளச் சபைகளின் பதவிக் காலம் முடிவுற்றவர்களுக்குப் பதிலாக புதிய பிரதிநிதிகளை நியமிப்பது, சம்பளச் சபைகளின் ஆகக்குறைந்த சம்பளத்தைச்சீராக்குதல் (தற்போது 44 சம்பளச் சபைகள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன), தனியார் துறை பணியாளர்களுக்காக கிடைக்கப்பெறுகின்ற சம்பளச் சபைகளை உள்ளடக்கக்கூடிய வகையில் சம்பளச் சபைகளின் உள்ளடக்கத்தை விரிவுபடுத்துதல், அதிகளவு பணியாளர்கள் இடம்பெறுகின்ற தொழில்களை இனங்கண்டு அத்தகைய புதிய தொழில்களுக்கு

புதிய சம்பளச் சபைகளைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், மாவட்ட / உப தொழில் அலுவலகங்களினால் நடத்தப்படுகின்ற தற்காலிக / மாதாந்த பரிசோதனைகளின் தகவல்களைப் பகுத்தராய்தலும், முன்னேற்றத்தை மீளாய்தலும், இந்தத் தகவல்களை உரிய தரப்பினர்களுக்கு வழங்குதலும், தொழில் நியமங்களை விருத்தி செய்வது தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் என்பவையாகும். இதற்கும் மேலதிகமாக, கூட்டு ஒப்பந்தங்களின் சட்ட செல்லுபடியாந் தன்மை நுண்ணாய்வு செய்யப்படும்.

**2012 ஒக்டோபர் 01 இலிருந்து 2013 செப்ரெம்பர் 30 வரை இந்தப் பிரிவினால் ஆற்றப்பட்ட பிரதான செயற்பாடுகள்**

1. 39 சம்பளச் சபைகளின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில்,
   i. 40 சம்பளச் சபைகளை அழைத்து ஆரம்ப கலந்துரையாடல்களை நடத்துதல்
   ii. கருத்துக்களைக் கோருவதற்கு 39 அறிவித்தல்களை விடுத்தல்
   iii. கருத்துக்கள் தொடர்பில் இறுதித் தீர்மானமெடுப்பதற்கு 49 சம்பளச் சபைகளை கூட்டங்களுக்கு அழைத்தல்
   iv. 39 சம்பளச் சபைகளின் வேதனங்களை அதிகரிப்பது தொடர்பில் தீர்மான அறிவித்தல்களை வெளியிடுதல்

2. பதவிக் காலம் முடிவடைந்த 20 சம்பளச் சபைகளின் பிரதிநிதிகளின் நியமனம் மற்றும் இறப்பு / பதவி விலகல் காரணமாக 16 சம்பளச் சபைகளுக்கு புதிய அங்கத்தவர்களை நியமித்தல்.

3. கொக்கோ, கறுவா, மிளகு வளர்ப்பு மற்றும் உற்பத்தித் தொழில் மூலம் 26 சம்பள அறிவித்தல் வெளியீடு

4. 02 புதிய சம்பளச் சபைகளின் தாபனம் தொடர்பான செயற்பாடுகள் (கோழி வளர்ப்பு, மரக்கறி மற்றும் பழ வளர்ப்பு, ஏற்றுமதித் தொழில் தொழில் சம்பளச் சபைகளைத் தாபித்ததன் பின்னர் ஆகக்குறைந்த சம்பள முன்மொழிவிற்கு கருத்துக்களைக் கோருவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பான சேவை வகைப்பாடு இனங்காணப்படுகின்றன)

5. சம்பளச் சபைகளின் உள்ளடக்கத்தை விரிவாக்குவதற்காக அச்சு,கற்குழி தொழில் தொடர்புபட்ட சேவை வகைப்பாட தொடர்பான ஆரம்ப தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

6. துறைமுகம், கப்பல் இறங்குதுறைகள் தொடர்பில் சம்பளச் சேவை வகைப்பாட்டினை நாளதுவரைப்படுத்துவதற்கு 02 நிகழ்ச்சித்திட்டங்களும், கலந்துரையாடலும் நடத்தப் பட்டிருந்தன.

7. இறப்பர் வளர்ப்பு, உற்பத்தித் தொழிலின் சேவை வகைப்பாடு மற்றும் உள்ளடக்கத்தை விரிவுபடுத்துவதற்கு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டிருந்தன. கருத்துக் கோரல் அறிவித்தல்கள் கட்டளையை திருத்துவதற்காக பிரசுரிக்கப்பட்டுள்ளன.

8. அனைத்துத் தொழில் அலுவலகங்களினால் மாதாந்த தொழில் பரிசோதனைகளைச் செய்வது தொடர்பான தகவல்களைக் கோரி, உரிய முறையில் புள்ளிவிபரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

9. தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக 06 தொழில்தருநர்கள் - பணியாளர்கள் நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**2013 ஒக்டோபர் முதல் திசெம்பர் வரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்**

1. தேசத்திற்கு மகுடம்-2014 இற்கு இணையாக 04 தொழில்தருநர்கள் - பணியாளர்கள் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல்.

2. தெங்கு வளர்ப்புத் தொழிலின் சம்பளத்தை அதிகரித்தல்.

3. இறப்பர் வளர்ப்பு, உற்பத்தித் தொழிலை உள்ளடக்குவதற்கு விரிவாக்குதல் மற்றும் சேவை நியதிகள் மற்றும் நிபந்தனைத் திருத்துதல்.

4. தேயிலை, இறப்பர் தொழிலின் கூட்டு உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்படாத பணியாளர் களின் சம்பளத்தை மீளாய்வது தொடர்பான செயற்பாடுகள்.

**2014 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்படவுள்ள விசேட நிகழ்ச்சித்திட்டங்களும், கருத்திட்டங்களும்**

1. சம்பளச் சபைகளின் ஆகக்குறைந்த வேதனத்தை அதிகரித்தல்.
2. தனியார் கல்வி நிறுவனம் தொடர்பில் சம்பளச் சபையைத் தாபித்தல்.
3. சில்லறை, மொத்த விற்பனை தொழிலின் சேவை நிபந்தனைகளைத் திருத்துதல்.
4. சுத்திகரிப்புத் தொழிலின் சேவை நிபந்தனைகளைத் திருத்துதல்.
5. புடைவை உற்பத்தித் தொழிலை மேவுவதற்கு விரிவுபடுத்துதல்.
6. துறைமுகம், உள்ளடக்குவதற்கு சம்பளச் சபைகளை விரிவாக்கி சேவை வகைப்பாடுகள் மற்றும் சேவை நிபந்தனைகளை சீர்ப்படுத்துதல்.
7. தேயிலை வளர்ப்பு மற்றும் உற்பத்தித் தொழிலை உள்ளடக்கி விரிவாக்குதலும், சேவை நிபந்தனைகளைத் திருத்துதல்.

## விசேட புலனாய்வுப் பிரிவு

விசேட புலனாய்வுப் பிரிவின் பிரதான பங்கு, அதிமேதகு சனாதிபதி அவர்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் மற்றும் தொழில் ஆணையாளர் அதிபதியினால் அனுப்பப்படுகின்ற விசேட முறைப்பாடுகளை விசாரணை செய்து, தேவையான உடனடி நடவடிக்கையை எடுப்பதாகும். இதற்கு மேலதிகமாக, நாட்டின் அனைத்துப் பிரதேசத்திலும் ஏற்படுகின்ற பணி நிறுத்தம், கதவடைப்பு போன்ற அத்தகைய அமைதியின்மையை ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் மத்தியஸ்தராகத் தொழிற்படுதல், தொழில் ஆணையாளர் அதிபதியின் அங்கீகாரத்திற்கமைவாக பல்லின விசாரணைகளை நடத்துதல், மாவட்ட , உப தொழில் அலுவலகங்களினால் நடத்தப்படுகின்ற விசாரணைகள் அல்லது பரிசோதனையில் திருப்தியற்ற தரப்பினரால் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு அனுப்பப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துதலும், அவற்றை பின்தொடர்தலும்.

**2012 ஒக்டோபர் 01 இலிருந்து 2013 செம்ரெம்பர் 30 வரை நடத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பான முன்னேற்றம்**

- நடத்தப்பட்ட முறைப்பாட்டு விசாரணைகளின் எண்.- 156
- கணக்கிடப்பட்ட ஊ.சே.நி நிலுவைப் பெறுமதி 29,540,020,45 ரூபா
- கணக்கிடப்பட்ட நியதி அறவீடுகளின் நிலுவை- 5,708,233.30 ரூபா

**தகவல்களை வழங்குவது தொடர்பான தொழிற்பாடுகள்**

இந்தப் பிரிவு, பாராளுமன்றம், பாராளுமன்ற ஆலோசனைக் குழு, பாராளுமன்ற பொது மக்கள் முறையீட்டுக்கு குழு, நிருவாகம் மீதான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றிற்கு தகவல்களை வழங்கி ஒருங்கிணைக்கின்றது.

**ஊழியர் சேமலாப நிதியத்திற்கான புதிய தாபனங்கள் தொடர்பான தகவல்களுக்கான ஏற்பாடு**

கம்பனி பதிவுகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்படுகின்ற புதிய கம்பனிகள் உரிய காலப்பகுதிக்கு ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பதிவுச் சான்றிதழ்களை பெறுவதற்கு இதன் கீழ் மாவட்ட, உப தொழில் அலுவலகங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

**பொதுமக்கள் தகவல் நிலையம் மற்றும் தொழில் திணைக்கள இணையத்தளம் தொடர்பான கடமைகள்**

இதன் கீழ் உரிய காலப்பகுதியில் பின்வருகின்ற தொழிற்பாடுகளை இந்தப் பிரிவு ஆற்றியுள்ளது.

i. தொழில் திணைக்களத்தின் இணையத்தளத்தினை நாளது வரைப்படுத்துதலும், பேணுவதிலும் ITC நிறுவகத்துடன் ஒருங்கிணைதல்.
ii. பொது தகவல் திணைக்களத்திற்கு (1919) தகவல்களை வழங்குகின்றபோது தொழில் திணைக்களப் பிரிவுகளை ஒருங்கிணைக்கின்றது.
iii. இலங்கை அரச வலையமைப்பு தொடர்பான செயற்பாடுகளில் இலங்கை தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் திணைக்களத்தின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கின்றது.

**பெண்கள், சிறுவர் அலுவல்கள் பிரிவு**

இலங்கையின் உற்பத்திச் செயன்முறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு மகளீர் தொழில்களினால் வழங்கப்படுகின்றது என்பதுடன், அவ்வாறு தொழில் புரிகின்ற பெண்களின் உரிமைகள், பாதுகாப்பு, காப்பு, சுகாதாரம் மற்றும் சேமநலன் தொடர்பில் வசதிகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பில் எண்ணிக்கையிலான விசேட சட்டங்களை இந்தப் பிரிவு நடைமுறைப்படுத்துகின்றது.

தொழில் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் அலுவல்கள் பிரிவு, சிறுவர்கள் தேசத்தின் உயிரோட்டமானவர்கள் என்ற வகையில் அவர்களுக்கு உடல், உளரீதியில் வளமானவர் களாக்குவதற்காக சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற உலகப் பொறுப்பிற்காக, சிறுவர் ஊழியத்தை இல்லாதொழித்தல், சிறுவர் ஊழியத்திற்கெதிராக பணிபுரிதல், தொழில் புரிவதற்கான ஆகக்குறைந்த வயதைத் தீர்மானித்தல், தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழில்களை பகுத்தாராய்தல், வீட்டு வேலைகளிலும், ஏனைய ஆபத்தான பணிகளில் சிறுவர்களை இடுதல் என்ற பிரச்சனை களுக்குத் தீர்வாக சிறுவர் தொழிலை இல்லாதொழிக்கின்ற நோக்கில் பெறப்படுகின்ற முறைப்பாடு களைப் பரிசீலித்தல் மற்றும் அத்தகைய தொழில்தருநர்களை நீதிமன்றத்தில் நிறுத்துதல் போன்றவற்றைச் செயற்படுத்துவதற்கு மாவட்ட தொழில் அலுவலகங்களுடன் இணைந்து ஆராய்ச்சிகளை நடத்துகின்றது.

இந்தப் பிரிவு பின்வருகின்ற சட்டங்களை சட்டமாக்குகின்றது:

1. 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளம் நபர்கள் மற்றும் சிறுவரை தொழிலுக்கமர்த்துதல் சட்டம்
2. 1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டம்.
3. 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் பெண்கள், இளம் நபர்கள் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள்
4. 1945 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பெண்கள், இளம் நபர்களின் தொழிற்சாலைகள் சட்டளைச் சட்டத்துடன் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள்

**2012 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

பண்டாரவளை, கெடில்பிட்டி, ஜகதல்ல நலன்புரி நிறுவகங்களில் 2012 ஒக்டோபர் 01 ஆம் திகதி சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டத்தை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்து. இதற்கு மேலதிகமாக, பெண் பணியாளர்களுக்கு 03 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும், 03 ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.70 இரவு நேரப் பரிசோதனைகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தீங்கிளைக்கின்ற சிறுவது தொழிலுக் கெதிரான சட்டக் கையேடொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 02 பயிற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டிருந்தன. அதேபோன்று, தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழில் தொடர்பில் பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்கு ஊடகங்களினூடாக பிரசாரம் செய்யப்பட்டிருந்தது.

**2012 சனவரி 01 இலிருந்து 30 வரையான முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | எண்ணிக்கை |
|---|---|
| 1. பெருந்தோட்டத்துறையில் பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 18 |
| 2. ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம் | 15 |
| 3. சேவையின் போதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 50 |
| 4. இரவு நேர சுழற்சி முறை நேரக் கடமையைப் பரிசீலித்தல் | 72 |
| 5. பல்வேறு துறைகளிலிருக்கின்ற சிறுவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் | 05 |
| 6. பயிற்சியாளருக்கான பயிற்சி | 04 |
| 7. ஆபத்தான வலயங்களில் தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழிலை இல்லா தொழித்தல் தொடர்பான நிகழச்சித்திட்டம் | 20 |
| 8. சிறுவர் ஊழியத்தை இல்லாதொழிப்பது தொடர்பான தேசிய வழிகாட்டல் குழுக் கூட்டங்கள் | 02 |
| 9. தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழில் மீதான விசேட விசாரணை | 06 |

இதேபோன்று, பிலியந்தலையில் 2013 மார்ச் 08 ஆம் திகதி மகளீர் தினக் கொண்டாட்டத்தை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

**2013 ஒக்டோபர் 01 ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்**

- இரத்தினபுரி, குருவிட்டை நகர சபை மைதானத்தில் 2013 ஒக்டோபர் 01 ஆம் திகதி சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டங்களை நடத்துதல்.
- பெருந்தோட்டத் துறை, ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சேவையின் போதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**2014 ஆம் ஆண்டில் நடத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ள விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

1. தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழில் தொடர்பில் பாடசாலை மட்டத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

   - மூன்று மொழிகளிலும் சுற்றறிக்கை மூலம் தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழில் தொடர்பில் இலங்கையின் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அறிவூட்டுதல்.

   - இலங்கையின் அனைத்துப் பாடசாலைகளிலும் பாடசாலை சிறுவர்களிடையே தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழில் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு மூன்று மொழிகளிலும் வர்ணத்தில் அச்சிடப்பட்ட சிற்றேடுகளை வழங்குதல்.

2. வருமானம் குறைந்த அல்லது சமுர்த்தி பயனாளிகளின் 18 வயதிற்கும் குறைந்த இளைஞர் களுக்கான சுயவேலைவாய்ப்பு மற்றும் NITA யுடன் இணைந்து தொழில்சார் வழிகாட்டல்கள் உள்ளடங்கலாக 44 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

**2016 ஆம் ஆண்டில் தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழிலை இல்தொழிப்பதற்கான அணுகுவழி**

- போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பெற்றோர்களை இழந்த, பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது தொடர்பில் 200 பரிசோதனைகளை நடத்துதல்.
- சிறிய, நடுத்தர தோட்டத் துறைகளில் அமைந்திருக்கின்ற தொழில் அலுவலகங்களிலிருக் கின்ற தொழில் அலுவலர்களினால், தேயிலை ஏற்றிச்செல்லப்படுகின்ற பிரதேசங்களில் இடம்பெறுகின்ற தீங்கிளைக்கக்கூடிய பணிகளில் சிறுவர்கள் பணிக்கிடப்பட்டிருப்பதை இனங்கண்டு அத்தகைய இடங்களில் 144 பின்தொடர் நடவடிக்கைகளை நடத்துதல்.

- மீன்பிடித் துறையில் ஆழமான நீரில் மீன்பிடித்தல் மற்றும் சுழியோடுதல் போன்ற அத்தகைய ஆபத்தான தொழில்களில் சிறுவர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார்களா என்று பரிசோதித்தல்.
- “ஒவ்வொரு பிள்ளையையும் எனது பிள்ளை போன்று அன்பு செலுத்துகின்றேன். 18 வயதிற்குக் குறைந்த எந்த பிள்ளையையும் ஆபத்தான தொழில்களில் நான் பணிக்கிடமாட்டேன்” என்ற வாசகத்தையுடைய ஒட்டுத்தாள்களை அச்சிடுதல்.

## சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவு

சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவின் பிரதான குறிக்கோள், சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களின் ஏற்பாடுகளை மீறியவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் சட்ட நடவடிக்கை எடுத்து தொழில் திணைக்களத்தினால் நடை முறைப்படுத்த வேண்டிய அத்தகைய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கும், அதனூடாக வேலையாளர்களின் உரிமைகளை வலுப்படுத்துதலும், தொழில்தருநருக்கும், பணியாளர்களுக்குமிடையிலான கூட்டுறவினை விருத்தி செய்தலுமாகும்.

அத்துடன், தொழில் சட்டங்கள் மீறுகின்றவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைச் செயல்முறையில், சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அலுவலர்களினால் முகம் கொடுக்கப்பட்ட சட்டப் பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனை வழங்குதல், அவர்களது அறிவினை விருத்தி செய்தல், நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தல், தொழில் திணைக்களத்திற்கு எதிராக உயர் நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படும் சந்தர்ப்பத்தில் சட்டமாஅதிபதி திணைக்களத்துடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் என்பன சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவின் கீழ் தொழிற்படுத்தப்படுகின்றன.

**2012 ஒக்டோபர் 01 இலிருந்து 2012 செப்ரெம்பர் 30 வரை சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் அறவிடப்படுவதற்குள்ள பண நிலுவைத் தொகைகள் பின்வருமாறு:**

| சட்டம் | வழக்குகளின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் | 2549 | 366,008,169.00 |
| கைத்தொழில் பிணக்குகள் சட்டம் | 113 | 1,221,733.00 |
| தொழில் முடிவுறுத்தல் சட்டம் | 59 | 104,619,801.00 |
| சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் | 180 | 10,925,727.00 |
| கடை மற்றும் அலவலக ஊழியர் சட்டம் | 98 | 38,237,109.00 |
| தொழில் நியாயாதிக்க கட்டளைகள் | 144 | 38,711,384.00 |
| பெண்கள், இளம் நபர்கள், சிறுவர் தொழில் சட்டம் | 08 | - |
| ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் | 2755 | 1,598,530,653.00 |
| 9. மகப்பேற்றுக் கட்டளைச் சட்டம் | 05 | 51,300.00 |
| 10. வரவுசெலவுத்திட்ட நிவாரணச் சட்டம் | 42 | 980,046.00 |
| 11. அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் | 04 | - |

★ ஊ.சே.நி வழக்குத்தொடுப்புக்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதைய அறிக்கைகளின் கீழ் தயாரிக்கப்பட்ட பணம் காரணமாக இந்த புள்ளிவிபரங்கள் மாறக்கூடும்.

## ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு

1958 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து பயனுக்குவரும் வகையில் இலங்கையில் ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற தனியார், அரசுசார் பணியாளர்களின் வெற்றிகரமான ஓய்வு வாழ்க்கைக்கு உதவும் நோக்கில் முக்கியமான சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றாக 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. 1959 ஆம் ஆண்டில் பணியாளர்களின் எண்ணிக்கை 850,000 ஆக இருக்கையில், ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை 6400 ஆகும். 2012 ஆம் ஆண்டில் பங்களிப்புச் செய்கின்ற செயலுறு தொழில்தருநர்களின் எண்ணிக்கை 68,771 ஆகவும், பங்களிக்கின்ற செயலுறு பணியாளர்களின் எண்ணிக்கை 2.2 மில்லியனாகவும் இருந்தது. அதேபோன்று, 1959 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான வருடாந்த உதவுதொகை 12.02 மில்லியன் ரூபாவாக இருந்தது. 2012 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட உதவுதொகை 70.157 மில்லியன் ரூபா வாகும். 2012 ஆம் ஆண்டின் இறுதியில் நிதியத்தின் மொத்தப் பெறுமதி 1,144,931 மில்லியன் ரூபாவாகும்.

### ஊழியர் சேமலாப நிதிய நன்மைகள் கொடுப்பனவு

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 115,654 அங்கத்தவர் நன்மைகள் கோரல் விண்ணப்பங்கள் தொடர்பில் உறுப்பினர்களின் நன்மைகளாக அல்லது அவர்களது சட்ட நன்மைகளாக 48,015 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

### ஊ.சே.நிதியத்தினூடாக வீடமைப்புக் கடன்களை வழங்குதல்

ஊ.சே.நி அங்கத்தவர்களின் கடன் நோக்கத்திற்கெதிரான பிணைப்பொறுப்பாக வைத்துக் கொண்டு, நிலுவையின் ஆகக்கூடியளவான 75% இற்கமைவாக வீடமைப்புக் கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கம், ஊ.சே.நி அங்கத்தவரின் வீடமைப்புக் கடன் நோக்கத்திற்காக வீடமைப்புக் கடன்களை வழங்குவதாகும். இந்தத் திட்டத்தின் கீழ், வீடொன்றை நிருமாணித்தல், வீடொன்றைக் கொள்வனவு செய்தல், வீடொன்றைத் திருத்துதல், காணியொன்றை கொள்வனவு செய்தல் மற்றும் ஈடுவைத்த ஆதனமொன்றை மீட்பது போன்ற காரணங்களுக்காகக் கடன் பெற முடியும்.

### ஊ.சே.நிதியத்திற்கான உதவுதொகை

ஊழியர் சேமலாப நிதியம், தொழில்தருநர், பணியாளர் இருவரது பங்களிப்புடன் கூடிய கட்டாய ஓய்வூதிய நன்மைத் திட்டமாகும். தற்போது ஆகக்குறைந்த உதவுதொகை பணியாளரிடமிருந்து 8% மற்றும் தொழில்தருநரிடமிருந்து 12% என நிதியத்திற்கான மொத்த உதவுதொகை 20% ஆகும்.

### உதவுதொகைகளைச் சேகரித்தல்

சட்டத்தினால் மேவப்படுகின்ற அனைத்துப் பணியாளர்களது மாதாந்த உதவுதொகைகள், உறப்படுகின்ற மாதத்தின் இறுதி நாளன்று அல்லது அதற்கு முதல் இலங்கை மத்திய வங்கியில் வைப்புச்செய்தல் வேண்டும். பணியாளரின் உதவுதொகை, பணியாளரின் மொத்த உழைப்பிலிருந்து கணிக்கப்படுகின்றது. மொத்த உழைப்பானது, இணைப் படிகள், இணைப்படிகளுக்கு சமமான படியொன்று, உணவுப் படி, தரகுப்பணங்களை உள்ளடக்குகின்றது. உதவுதொகையின் விரைவான அதிகரிப்பு கடந்த இறுதி தசாப்தத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. உதவுதொகையின் அதிகரிப்பிற்கு பின்வருகின்ற காரணிகள் காரணமாகும்.

1) சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் முதலீட்டுச் சபையின் நடைமுறையின் கீழ் தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்தமை.

2) உதவுதொகைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் பயனுறுதிவாய்ந்த வகையில் பரவலாக்கப்பட்டமை.

3) விசேட திடீர் சோதனை அலகுகளினூடாக நீண்ட காலமாகச் செலுத்தாதிருந்த தொழில் தருநர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

4) மாவட்ட மட்டத்தில் ஊ.சே.நி உதவுதொகையை அறவிடுவதற்கு தொழில் அலுவலர்களின் போதியளவு பதவியணியை ஈடுபடுத்துதல்.

5) மாவட்ட மட்டத்தில் பணியாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதனூடாக நிதியத்திற்கு பணியாளர்களை ஈர்த்தல்.

கடந்த தசாப்த காலப்பகுதியில் சட்டங்களைத் திருத்தியமை மற்றும் நிருவாகத்தை மீள ஒழுங்கமைத்தமை காரணமாக ஆண்டு காலப்பகுதியில் படிப்படியாக ஏற்பட்ட மேம்பாட்டினை இந்த அட்டவணை காட்டுகின்றது.

| ஆண்டு | உதவுதொகை (ரூபா.மில்.) |
|---|---|
| 2003 | 20,348 |
| 2004 | 23,872 |
| 2005 | 24,324 |
| 2006 | 31,720 |
| 2007 | 40,574 |
| 2008 | 45,951 |
| 2009 | 48,712 |
| 2010 | 54,796 |
| 2011 | 61,879 |
| 2012 | 70,157 |

### பணம் மற்றும் வட்டிகளின் முதலீடு

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதலிடப்பட்ட பணத்தின் மொத்தத் தொகை 1,105,544 மில்லியன் ரூபாவாகும். இவை பிணைப் பொறுப்புக்கள், திறைசேரி பிணைகள், கம்பனி கடன் அட்டைகள் மற்றும் பங்குச் சந்தை ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவு

இந்தப் பிரிவு 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தை வலுப்படுத்துகின்றது. இதன் பிரதான பொறுப்பு, தொழில்புரிகின்ற பணியாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சேநலனை உறுதிப்படுத்துவதாகும். தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவின் செயற்பாடுகள் பரவலாக்கப்பட்டுள்ளதுடன், அலுவலகக் கிளைகள் யாழ்ப்பாணம், அனுராதபுரம், கண்டி, கம்பஹா, கொழும்பு, இரத்தினபுரி, காலி, குருணாகல், பதுளை, ஆகிய நகரங்களில் தாபிக்கப்பட்டுள்ளன.

### இந்தப் பிரிவின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு:

- தொழிற்சாலைகளின் இயந்திரங்கள், வேலைச் சூழல் மற்றும் வேலையாற்றும் முறையியல்களைப் பரிசோதித்ததன் பின்னர், தொழிற்றுறை விபத்துக்களையும், நோய்களையும் தடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான ஆலோசனையை வழங்குதல்.

- தொழில்தருநர், பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவகங்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

- இறப்பினை ஏற்படுத்துகின்ற விபத்துக்கள் இடம்பெறுகின்றபோது இறப்பின் காரணத்தைக் கண்டறிவதற்கு திடீர் மரண விசாரணை அலுவலர்களுக்கு உதவுதல் மறறும் அத்தகைய விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு தொழில்தருநர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

- விபத்துக்களை அவதானித்ததன் பின்னர் பதியப்படுகின்ற விபத்துக்களை பபகுத்தாராய் வதனூடாக பாதுகாப்பான வேலை முறைகளுக்கு ஆலோசனை வழங்குதல்.

- தொழிற்சாலையில் தொழில் புரிகின்ற பணியாளர்களுக்கு சுற்றாடல் நிலைமையை பராமரிப்பதற்கான ஒலி, வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் போன்ற அத்தகைய வேலைத்தலக் காரணிகளை அளவிட்டதன் பின்னர் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

### திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும்

| பணி இலக்கு | 2012/10/01 முதல் 2013/09/30 வரை | 2013/10/01 முதல் 2013/12/31 வரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் |
|---|---|---|
| தொழிற்சாலை விபத்துக்களை விசாரணை செய்தல் முறைப்பாடுகளை விசாரித்தல் | 6282 | 1500 |
| பணியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 244 | 60 |
| அதிக ஆபத்தான இயந்திரங்களின் பரிசோதனை | 8523 | 1500 |
| தொழிற்சாலைகளின் புதிய பதிவுகள் | 1612 | 375 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 9 | 6 |
| தொழிற்சாலை கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை உருவாக்குதல் | - | ஒழுங்குவிதிகள் 5 |

## தொழில்சார் சுகாதாரப் பிரிவு

இந்தப் பிரிவின் பிரதான கடமைகள், தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற மக்களின் உள, உடல் மற்றும் சமூக சுகாதாரத்தை மேம்படுத்துவதும், பேணுவதுமாகும். இந்தப் பிரிவு, தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தை வலுப்படுத்துவதற்கு தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவிற்கு தேவையான தொழில்நுணுக்க ஒத்துழைப்பை வழங்குகின்றது. இந்தப் பிரிவு, தொழிற்சாலையில் வேலைச் சூழலின் பௌதீக, இரசாயன, உயிரியல் மற்றும் தொழில் காரணிகள் தொடர்பான ஆலோசனை களை அடிக்கடி வழங்குகின்றது.

வேலைச் சுற்றாடலில் எழக்கூடிய உழைக்கும் மக்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினைப் பேணுவதற்கும், அபாயகரமான நிலைமைகளைத் தவிர்ப்பதற்கும் பங்களிப்புச் செய்கின்றது. தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் அறியச் செய்வதற்காக கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல் இந்தப் பிரிவினால் நிறைவு செய்யப்படுகின்றது. இங்கே பணியாளர்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்காக உரிய தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்குதல் மற்றும் பணியாளர் களின் ஊறு காரணமாக தற்காலிகமான, நிரந்தரமான இயலாமைகளைத் தீர்மானிப்பதற்கு மருத்துவ பரிசோதனைகளை நடத்துதல்.

### 2012 ஒக்டோபர் 01 முதல் 2013 செப்ரெம்பர் 30 வரையான முன்னேற்றம்

- சுற்றாடல் அளவீடுகள் 144
- பௌதீக அளவீடுகள் மருத்துவ பரிசோதனைகள் 434
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான ஆய்வு 91
- விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 127
- ஊ.சே.நி, ஊ.ந.பொ.நி.ச மருத்துவச் சபைகளுக்கு பணித்தமை 25

### 2014 ஆண்டில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

❖ முதலீட்டுச் சபையின் ஒருங்கிசைவுடன், கட்டுநாயக்கா, பியகம, வத்துப்பட்டிவல மற்றும் பல்லேகல சுதந்திர வர்த்தக வலையங்களின் முகாமையாளர்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

❖ ஒவ்வொரு வலயத்திற்கும் ஒன்று என்ற வீதத்தில் ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 5.

❖ பணியாளர்களுக்கு தொழிற்சூழலியில் தொடர்பான 5 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

❖ குருணாகல் மாவட்டத்தில் 10 நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழிற்சாலைகள் சூழல் அளவீடுகளை நடத்துதல் மற்றும் அளவீடுகளின் பெறுபேறுகளின்படி தொழிற்சாலைகளின் பௌதீகச் சூழலை விருத்தி செய்வதற்கான உபாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

❖ நுரைச்சோலை நிலக்கரி பொறித்தொகுதியின் பணியாளர்களுக்கு ஈரல் பரிசோதனைகளை நடத்துதல்.

## திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவின் செயற்பணி திணைக்களத்தின் ஆக்கத்திறனை அதிகரிப்பதற்காக சிறந்த அலுவலர் தொகுதியை உருவாக்குதல், தொழில் அமைதியைத் தாபிப்பதற்கான திட்டங்கள் மற்றும் கொள்கைகளைத் தயாரிப்பதில் உதவுதல், தரவுகளைத் தயாரித்தல் மற்றும் ஆய்வுகளை நடத்துதல் என்பவையாகும்.

### திணைக்களத்தில் அலுவலர்களின் பயிற்சிச் செயற்பாடுகள்

**2012 ஒக்டோபர் 01 முதல் 2013 செப்ரெம்பர் 30 வரையான முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டம் | 2012/10/01 முதல் 2012/12/31 வரை | 2013/01/01 முதல் 2013/09/30 வரை |
|---|---|---|
| பதவிநிலை அலுவலர்களின் பயிற்சி | 4 | 8 |
| முகாமைத்துவ உதவியாளர்களின் பயிற்சி | 2 | 16 |
| கணினி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 13 | - |
| ஏனைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | - | 9 |
| பட்டப்பிற்படிப்பு, டிப்புளோமா | 3 | 35 |
| வெளிவாரிப் பயிற்சிகள் | 10 | 13 |

### முன்னேற்ற மீளாய்வுச் செயற்பாடுகள்

- 2013 ஆம் ஆண்டில் இறுதி மூன்று காலாண்டுகளில் நடத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை - 4

## செயற்பாடுகளைத் திட்டமிடுதல்

திணைக்களத்தின் செயற்பணியை அடைவதற்கான செயற்பாடுகளை முறைசார்ந்த வழிகாட்டல்களை வழங்கக்கூடியவாறு, இந்தப் பிரிவு செயற்திட்டத்தை தயாரிப்பதுடன், செயற்பாடுகளின் முன்னேற்றத்தை மாதாந்தம், காலாண்டுரீதியில் மேற்பார்வை செய்கின்றது.

## சர்வதேச தொழில் தாபனத்துடன் இணைந்து ஆற்றப்படுகின்ற செயற்பாடுகள்

சர்வதேச தொழில் தாபனத்தின் இலங்கைப் பிரதிநிதிகளுடன் இணைந்து தொழில் துறையின் அபிவிருத்திக்காக குறிப்பிடத்தக்க காலப்பகுதியில் ஆற்றப்பட்ட செயற்பாடுகள்.

- திணைக்களத்தின் தொழில் விசாரணை செயன்முறையை மேற்பார்வை செய்வதற்கான கணினி வலையமைப்பு முறையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- தொழில் விசாரணை வழிகாட்டலைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், புதிய முறையியல்களுக்கு அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன.
- பயிற்சிப்பட்டறைகளை நடத்தி தொழில் விசாரணைக் கொள்கைகளை வகுத்தமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
- நடுத்தீர்ப்பு மற்றும் தொழில் விசாரணை முறையியல்கள் மீது அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் மேற்கொள்ளப்பட்டது.

# புள்ளிவிபரவியல் பிரிவு

புள்ளிவிபரவியல் பிரிவின் பிரதான தொழிற்பாடு, இலங்கையில் தொழில் துறையில் ஒழுங்கமைக்கப்பட்ட துறைகள் தொடர்பான தகவலைச் சேகரித்து, பகுத்தாராய்ந்து வெளியிடுவதாகும். இந்த நோக்கத்திற்காக வருடாந்தம் நடத்தப்படுகின்ற இரண்டு பிரதான தபால் கணக்கெடுப்பினூடாக வேலை மணியத்தியாலங்களின் எண்ணிக்கை பற்றிய தரவு சேகரிக்கப்படுகின்றது.

- வருடாந்த வேலைகள் மற்றும் தொழில் கணக்கெடுப்பு
- சாதாரண உழைப்புக்கள் மற்றும் வேலை மணித்தியாலங்களை கணக்கெடுத்தல்

### பிரிவின் வெளியீடுகள்

- வருடாந்த வேலைகள் மற்றும் தொழில் கணக்கெடுப்பு அறிக்கை
- தொழில் புள்ளிவிபரம் பற்றிய வருடாந்த வெளியீடு
- சாதாரண உழைப்புக்கள் மற்றும் வேலை மணித்தியாலங்கள் பற்றிய அறிக்கை

### 2013 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டு வரை பிரிவின் பிரதான செயற்பாடுகள்

- 2013 மார்ச்சிற்கான சாதாரண உழைப்புக்கள் மற்றும் வேலை மணித்தியாலங்கள் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பித்தல் மற்றும் செப்ரெம்பரிற்கான அறிக்கையைத் தயாரிப்பதற்கான ஒழுங்குகளை செய்தல்.
- சம்பளச் சபைகளின் ஆகக்குறைந்த சம்பளச் சுட்டியைத் தயாரித்தல் மற்றும் அதனை இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தல்.
- தொழில் புள்ளிவிபரங்கள் - 2012 இனைத் தயாரித்தல் (அச்சிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன)
- 2013 ஆம் ஆண்டிற்கு புதிதாகத் தயாரிக்கப்பட்ட வருடாந்த தொழில் கணக்கெடுப்பின் தரவினைக் கணினிமயப்படுத்துதலும், தொகுத்தலும்.

**2013 ஒக்டோபர் முதல் டிசெம்பர்வரை நடத்தப்படவுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்**

- வேலைக் கணக்கெடுப்பு - 2013 இனை கணினிமயப்படுத்தி, அவற்றைப் பகுத்தராய்ந்ததன் பின்னர் தரவினை அச்சிடுதல்.
- 2013 செப்ரெம்பரிற்கான சாதாரண உழைப்புக்கள் மற்றும் வேலை மணித்தியாலங்கள் பற்றிய அறிக்கையையைத் தொகுத்ததன் பின்னர் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.

**2014 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்**

- தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 42 சம்பளச் சபைகளின்படி திருத்தப்பட்டுள்ள சம்பளச் சபைகள் மற்றும் பணியாளர்களின் சாதாரண உழைப்புக்கள் மற்றும் வேலை மணித்தியாலங்கள் தொடர்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள சம்பளச் சபைகள் உள்ளடக்கப்படுதல்.
- ஒவ்வொரு புதிய சம்பளச் சபைகளுக்கான வினாக்கொத்தினை உருவாக்குதல் மற்றும் அதனை மூன்று மொழிகளிலும் தயாரித்தல்.
- புதிய முறையியல்களின்படி ஆகக்குறைந்த சம்பள வீதச் சுட்டியைத் தயாரித்தல்.

## நிதிப் பிரிவு

தொழில் திணைக்களத்தின் நிதிப் பிரிவின் பிரதான இலக்கு, திணைக்களத்தின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடையும் நோக்கில் அரச நிதிசார் கொள்கைகள் மற்றும் நிதிசார் ஒழுங்குவிதிகளுடன் இணங்குகின்ற உரிய நிதிசார் நிருவாகமொன்றைப் பராமரிப்பதாகும். திணைக்களத்தின் இலக்குகளை அடைவதற்கு காலத்துடன் கூடிய தேவைகளின்படி, வருடாந்த மதிப்பீடுகளினால் ஒதுக்கப்பட்ட பணங்களை உரிய பயனுறுதிவாய்ந்த முறையில் செலவுறுதல் மற்றும் தேவைகளுக்கும், உறப்படுகின்ற செலவினங்களுக்குமாக வெவ்வேறு அலுவலகங்களின் பல்வேறு கருத்திட்டங்களுக்காகத் தேவைப்பட்ட பணங்களை ஒதுக்குதல்.

**2013 செம்ரெம்பர் 30 வரை முதல் 03 காலாண்டுகளின் இறுதியில் திணைக்களத்தின் செலவீனத்தின் பொழிப்பு**

| | **ஒதுக்கீடு** | **செலவினம்** |
|---|---|---|
| மீண்டெழுவது (ரூபா.ஆயிரம்) | 1,100,630 | 736,928 |
| மூலதனம் (ரூபா.ஆயிரம்) | 760,275 | 117,735 |

திணைக்களத்தின் நிதிப் பிரிவு, தொழிற்றுறைத் தொடர்புகள் பிரிவு மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்களுடன் இணைந்து இலங்கையின் போக்குவரத்துச் சபையின் நிலுவைப் பணிக்கொடைக் கொடுப்பனவுகளைச் செய்துகொண்டிருக்கின்றது. இதன்படி, 2012 ஆம் ஆண்டளவில் 257 மில்லியன் ரூபா தொகை இதற்காகச் செலுத்தப்பட்டுள்ளது. 118 மில்லயன் தொகை பணியாளர்களுக்கான கொடுப்பனவாகவும், 1,755 மில்லியன் ரூபா பணியாளர்களின் கொடுப்பனவாக மாவட்ட தொழில் அலுவலகங்களுக்கு முற்பணமாகச் செலுத்தப்பட்டுள்ளது.

## அகக் கணக்காய்வுப் பிரிவு

நிதி ஒழுங்குவிதிகள், திறைசேரி, திணைக்களம்சார் சுற்றறிக்கைகளுக்கு அமைவாகச் செய்யப்படுகின்ற அக நிருவாக, பயனுறுதியும் ஆக்கத்திறனும் மற்றும் நிதிச் செயற்பாடுகள் தொடர்பில் பரிசீலித்தல் மற்றும் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல். தொழில் ஆணையாளர் அதிபதிக்கு கணக்காய்வாளர் அதிபதியினால் அனுப்பப்பட்ட கணக்காய்வு மீளாய்வுகளுக்கு உரிய பிரிவுகளிலிருந்து தகவல்களைச் சேகரித்து பதில்களை அளித்தல்

2012 ஒக்டோபர் 01 முதல் 2013 செப்ரெம்பர் 30 வரையான காலப்பகுதியில் 44 அலுவலகங்கள் மற்றும் பிரிவுகளை அகக் கணக்காய்வுப் பிரிவு பரிசீலிப்பதுடன், 2013 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டுக் காலப்பகுதியில் 06 மாவட்ட ஆலுவலகங்களைப் பரிசிலிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## நிருவாகப் பிரிவு

தொழில் திணைக்களத்தின் ஒட்டுமொத்த தொழிற்பாடுகளைத் தயாரித்தலும், விருத்தி செய்தலும் மற்றும் தொழில் திணைக்களத்தின் பௌதீக, மனித வளங்களின் தரத்தை மேம்படுத்துதல் இப்பிரிவின் பொறுப்பாகும்.

இந்தப் பிரிவின் கீழ் தொழிற்படுகின்ற 04 உப பிரிவுகள் :

- நிருவாகக் கிளை
- தாபனக் கிளை
- கட்டடப் பராமரிப்புப் அலகு
- நூலகம் மற்றும் தகவல் பிரிவு

### மனித வளங்கள்

தொழில் திணைக்களத்தில் 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் பல்வேறு பதவிகளுக்கு 2,219 அலுவலர்கள் பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர். திணைக்களத்தின் பணியாளர்களின் பதவியணியில் கடந்த 3 ஆண்டு காலப்பகுதியில் செய்யப்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு.

| | **2010** | | **2011** | | **2012** |
|---|---|---|---|---|---|
| ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் மொத்தப் பதவியணி | 2,185 | | 2,184 | | 2,271 |
| திணைக்களத்தினால் செய்யப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு | 105 | | - | | 23 |
| • திணைக்களத்திற்கான இணைந்த சேவையின் புதிய நியமனங்கள் | 25 | | 159 | | 30 |
| இடமாற்றல்கள் | 2 | | 15 | | (7) |
| • பல்வேறு காரணங்களின் கீழ் பதவியினரைச் சேர்த்தல் | - | | - | | 1 |
| • ஓய்வுபெறுதல் | (69) | | (67) | | (52) |
| • பல்வேறு காரணங்களின் கீழ் பதவியினரை திணைக்களத்திலிருந்து அகற்றுதல் | (64) | | (20) | | (47) |
| ஆண்டின் இறுதியில் மொத்தப் பதவியணி | 2,184 | | 2,271 | | 2,219 |

திணைக்களம்சார் உதவித் தொழில் ஆணையாளர்கள் 09 பேர், சுருக்கெழுத்தாளர் 10 பேர், சாரதிகள் 12 பேரை 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. 2013 ஆம் ஆண்டின் இறுதியில் 15 திணைக்களம்சார் உதவித் தொழில் ஆணையாளர்கள், 14 சட்ட அலுவலர்கள் மற்றும் 31 அலுவலக உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

### பௌதீக வள அபிவருத்தி

36 தளங்களைக் கொண்டிருக்கின்ற உத்தேசிக்கப்பட்ட “மெஹெவர பியஸ” கட்டடத்தின் பிரதான ஒப்பந்தகாரரின் நிருமாணச் செயற்பாடுகள் இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்ட கட்டடங்களின் பிரந்திய அலுவலகங்களின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அலுவலகம் | மொத்தச் செலவீனம் (ரூபா மில்.) |
|---|---|
| குளியாப்பிட்டி | 12.8 |
| களுத்துறை | 19.5 |
| அனுராதபுரம் | 19.1 |
| கந்தளாய் | 6.9 |
| அம்பாறை | 18.8 |
| யாழ்ப்பாணம் (கட்டம் I) | 31.0 |

இதற்கு மேலதிகமாக, 2013 செப்ரெம்பர் 30 ஆம் திகதியிலிருந்து நிருமாணிக்கப்பட்ட கட்டடங்களின் செலவீனம் பின்வருமாறு:

| அலுவலகம்/கட்டடங்கள் | மொத்தச் செலவு (ரூபா.மில்.) (2013.01.01- 2013.09.30) |
|---|---|
| யாழ்ப்பாணம் (கட்டம் II) | 18 |
| பெலியத்தை ( கட்டம் I) | 13 |

இதற்கு மேலதிகமாக, பெறுகைச் செயன்முறை இடம்பெறுகின்ற அவிசாவலை, நீர்கொழும்பு, பெலியத்தை, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் பொலநறுவை அலுவலகக் கட்டடங்கள் மற்றும் சித்தவக விடுதிக் கட்டங்கள் 2013 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் நிருமாணச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

**நூலகம் மற்றும் தொழில் அரும்பொருளகம்**

தொழில் திணைக்களத்தின் நூலகம், தொழில் திணைக்களம் உள்ளடங்கலாக தொழில் துறையுடன் தொடர்புபட்டுள்ள ஏனைய நிறுவனங்களின் தேவைப்படுகளுக்கு பொருந்தக்கூடியதான விடயப் பரப்புகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் தொழில் துறை தொடர்பில் பொது மக்களுக்கு அறிவினைப் பரப்புதல் போன்ற செயற்பாடுகளை ஆற்றுகின்றது. இலங்கையின் தொழில் துறை பற்றிய மதிப்பீடு தொழில் திணைக்களத்தினால் பேணப்படுகின்ற தொழில் அரும் பொருளகத்தில் மிகவும் கவரத்தக்க வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், தொழில் அரும் பொருளகம், தொழில் துறை மற்றும் பழைய தொழில் சட்டங்கள் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் பேணிப்பாதுகாக்கின்றது.

# வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்

வேலைத்தளத்தில் ஏற்படுகின்ற விபத்துக்களுக்காக பணியாளர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவை வழங்குவதற்காக 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்ட ஈட்டுக் கட்டளைச் சட்டம் 2005 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்பட்டது.

**பிரதான குறிக்கோள்கள்**

- வேலையிலீடுபட்டிருக்கையில் ஊறு ஏற்படுகின்ற பணியாளருக்கு நட்டஈட்டினை வழங்குதல்.
- தொழிலின் தன்மை காரணமாக நோய்வாய்ப்பட்டு துயருறுகின்ற பணியாளர்களுக்கு நட்டஈட்டை வழங்குதல்
- வேலையிலீடுபட்டிருக்கையில் மரணமடைந்த பணியாளரில் தங்கியிருப்போருக்கு நட்டஈட்டினை வழங்குதல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

- வேலையாளர் நட்டஈடுகள் தொடர்பில் நீதி விசாரணைகளை நடத்துதல்.
- நட்டஈட்டுக் கொடுப்பனவு தவிர்க்கப்படும் சந்தர்ப்பத்தில் கட்டளைகளை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- இலத்தினரியல் மற்றும் அச்சு ஊடகத்தினூடாக பிரபல்யத்தை வழங்கல்.
- வேலையிலீடுபட்டிருக்கையில் மரமடைந்த பணியாளரில் தங்கியிருப்போரின் நட்டஈட்டு நம்பிக்கைப் பொறுப்பைப் பராமரித்தல்.
- உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்களினூடாக அலுவலக முறையியலைச் செம்மைப்படுத்துதல்.
- தேசிய கண்காட்சிகளில் பங்குபற்றுவதனூடாக வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

**2012 ஒக்டோபர் 01 முதல் 2013 செப்ரெம்பர் 30 வரையான முன்னேற்றம்**

சமூகப் பாதுகாப்பு விடயப்பரப்பெல்லை உள்ளடக்கப்பட்டவாறு பெறுபேற்றை ஆற்றுப்படுத்திய முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தினூடாக இந்த குறிக்கோள்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

| தொழிற்பாடுகள் | 2012-10-01<br>2013-09-31 |
|---|---|
| 1. அறிக்கை செய்யப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை | 392 |
| 2. விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்குகள் | 1970 |
| 3. இறுதிக் கட்டச் செயற்பாடுகளுக்கான நட்டஈட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 277 |
| 4. பதிவு செய்யப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | 119 |
| 5. உயிராபத்தை ஏற்படுத்தும் விபத்துக்களுக்கெதிராக நட்டஈடாக அறவிடப்பட்ட தொகை | 6,688,420.10 |
| 6. நீதிமன்றங்களின் ஆணைப்படி அல்லது தன்னார்வ அடிப்படையில் உயிராபத்தை ஏற்படுத்தாத விபத்துக்களுக்காக தொழில் தருநர்களினால் வேலையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட தொகை | 10,315,119.45 |
| 7. பதிவுசெய்யப்பட்ட உடன்படிக்கைகளின்படி இறப்பை ஏற்படுத்தாத விபத்துக்கள் காரணமாக பணியாளர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை | 17,754,946.63 |
| 8. உயிராபத்தை விளைவிக்கும் விபத்துக்கள் தொடர்பில் அறிவிடப்பட்டதன் பின்னர் பராயமடையாத தங்கியிருப்போர் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணத் தொகை | 15,560,000.00 |
| 9. பராயமடையாதோர் சார்பாக திறக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 130 |
| 10. பராயமடையாதோர் சார்பாக திறக்கப்பட்ட கணக்குகள் அவர்கள் 18 வயதினை அடைந்ததும் மூடப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 181 |
| 11. செலுத்தப்பட்ட தொகை | 7,078,780.78 |

இதன்படி, மட்டுப்படுத்தப்பட்ட பதவியினருடன், 2013 செப்ரெம்பர் 30 வரை சுமார் 94 மில்லியன் ரூபாவை அறவிடக்கூடியதாகவிருந்ததுடன், வயதுவராதோருக்காக 181 கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 2013 செம்ரெம்பர் முதல் திசெம்பர் வரை நடத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்

- நுவரெலியா பிரதேசத்திற்காக புதிய நடமாடும் தொழில் நட்டஈட்டு நீதிமன்றத்தை நடைமுறைப்படுத்துதல்.
- ஆக்கத்திறன்சர் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனூடாக அலுவலக முறையியல்களை மேம்படுத்துதல்.
- பதவியினருக்கான உள ஆரோக்கியம் மற்றும் மன அளுத்தக் கட்டுப்பாடு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல்.
- வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கான இணையத்தளம் மற்றும் தகவல் முகாமைத்துவ முறைமையை உருவாக்குதல்.

## 2014 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள விசேட கருத்திட்டங்கள்

- தேசிய கண்காட்சிகளில் பங்குபற்றுவதனூடாக வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் மற்றும் அதனது செயற்படுகள் தொடர்பில் பொது மக்களின் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
- வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் மற்றும் வேலையாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டத்தின் பங்கு தொடர்பில் அரச அலுவலர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை உழுங்குபடுத்துதல்.

# தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமானது, 2007 செப்ரெம்பர் 11 ஆம் திகதி நிறுவப்பட்டிருந்ததுடன், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் சட்டமாக்கப்பட்டு சட்டரீதியாகத் தாபிக்கப்பட்டது. சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, நிறுவகமானது, தொழிற் சங்கத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் விடயத்தில் புலமையாளர்களான தொழில் துறையின் அரசாங்க அலுவலலர்கள் போன்றோரை உள்ளடக்குகின்ற தொழில் துறையின் முத்தரப்பினர் களிடமிருந்தான பிரதிநிதித்துவங்களை கொண்டிருக்கின்ற **“ஆளுநர் சபையினால்”** நிருவகிக்கப்படு கின்றது. தற்போது, தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் நியதிச்சட்ட அமைப்பாக தொழிற்படுகின்றது.

இந்த நிறுவகமானது, தொழில் திணைக்களம், ஏனைய தொடர்புடைய அரச துறை,அரசுசார், தனியார் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் நெருங்கிய ஒருங்கிசைவுடன் தொழிற்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், சர்வதேச தொழில் தாபனம் போன்ற அத்தகைய சர்வதேச தாபனங்களுடன் இணைந்த சக்தியாகும். இந்த நிறுவகமானது, இந்திய முக்கிய தாபனமான இந்திய வி.வி.கிரி தேசிய தொழில் நிறுவகத்துடன் பரஸ்பர ஒத்துழைப்பிற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட்டுள்ளது.

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் குறிக்கோளை அடையும் நோக்கில், இந்த நிறுவகத்தினால் தெரிவிக்கப்படுகின்ற பிரதான விடயப்பரப்புக்கள், தொழில் சட்டங்களும் தொழில் தொடர்புகளும் மற்றும் மனிதவள முகாமைத்துவமும் வேலைத்தல ஆக்கத்திறனும் போன்றவையாகும். மூன்று வெவ்வேறு பிரிவுகள், சேவைகளின் எல்லைக்காக மற்றும் பயிற்சிப் பட்டறைகள், குறுகிய கால பாடநெறிகள், சான்றிதழ் மற்றும் டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற அத்தகைய பாடநெறிகளுக்காக மூன்று விடயப்பரப்புக்கள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன.

### 2012-10-01 முதல் 2013-09-30 வரை திட்டமிடப்பட்ட, மதிப்பிடப்பட்ட செயற்பாடுகள்

| நிகழ்ச்சிததிட்டத்தின் பெயர் | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண். | முதிப்பிடப்பட்ட வருமானம் (ரூபா) | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண். | உழைக்கப்பட்ட வருமானம் (ரூபா) |
|---|---|---|---|---|
| டிப்புளோமாக்கள் | 3 | 2,358,000.00 | 3 | 3,733,500.00 |
| 1 நாள் நிகழ்ச்சித்திட்டம் | 46 | 1,656,000.00 | 14 | 903,000.00 |
| 2 நாள் நிகழ்ச்சித்திட்டம் | 26 | 1,794,000.00 | 15 | 960,250.00 |
| 3 நாள் நிகழ்ச்சித்திட்டம் | 7 | 630,000.00 | 6 | 1,532,500.00 |
| நடத்தப்பட்ட பரீட்சைகள் | - | - | 5 | 431,722.00 |



டிப்புளோமா பரீட்சை அலகு 8 - 2012 ஒக்டோபர்



பாதுகாப்பு அலுவலர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் - 2013 சனவரி



உயர் தொழில் உற்பத்தித்திறனுக்கான பாதுகாப்பு – 2013 யூன்



கூட்டுப் பேரம்பேசுதல் மற்றும் இணக்கப்பாட்டு உடன்படிக்கைகள் - 2012 டிசெம்பர்

**2013 செம்ரெம்பரிலிருந்து 2013 டிசெம்பர் வரை திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்**

| |
|---|
| **ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள்** |
| ➢ கடை மற்றும் காரியாலய சட்டத்தில் ஏற்பாடுகள் |
| ➢ பெண்கள், இளம் நபர்களும் சிறுவர்களும், மாற்றுத்திறனாளி மற்றும் வெளிநாட்டவர்களின் தொழில்களுக்கான விசேட நிபந்தனைகள் |
| ➢ வரவேற்பாளர்கள்/தொலைபேசி இயக்குநர்களின் தேர்ச்சியை விருத்தி செய்தல் |
| ➢ பால்நிலை மற்றும் தொழில் உற்பத்தித்திறன் |
| |
| **இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள்** |
| ➢ முரண்பாட்டினை முகாமை செய்தலும், துயரங்களைக் கையாளுதலும் |
| ➢ தரக் கட்டுப்பாட்டு வட்டம் |
| ➢ உயர் தொழில் உற்பத்தித்திறனுக்கான அலுவலக உதவியாளரின் பங்குகளும், பொறுப்புக்களும் |
| ➢ கூட்டுப் பேரம்பேசலும், இணக்கப்பாட்டு உடன்படிக்கைகளும் |
| |
| **நான்கு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள்** |
| ➢ உயர் தொழில் உற்பத்தித்திறனுக்கான அலுவலக முகாமைத்துவம் |

**2014 ஆம் ஆண்டுக்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட நிதியினால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் கொழும்பு, அம்பாறை, கேகாலை,குருணாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் நடத்தப்படும்.

# தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், 2005 ஏப்பிரல் 28 ஆம் திகதி தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருந்தது. இந்த நிறுவனம், பொருத்தமான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பான நடைமுறைகளினூடாகவும், உரிய பாதுகாப்புக் கொள்கையொன்றையும், முறையியல்களையும் பின்பற்றுவதற்கும், தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களைத் தடுப்பதனூடாகவும் ஒவ்வொருவருக்கும் சிறந்த வேலைச் சூழலொன்றை வழங்கு வதற்கும், பயிற்சிகளிலிருந்தோ அல்லது ஒரு நபரிலிருந்தோ நன்மைகளைப் பெறக்கூடிய தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தேவையான கல்வி மற்றும் பயிற்சியை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் வழங்குகின்றது.

**2012 ஆண்டில் முன்னேற்றம்**

**2) அ) 2012 ஒக்டோபர் முதல் 2013 செப்ரெம்பர் 30 வரையான முன்னேற்றம்**

- 2012.10.05 ஆம் திகதி தேசிய சுகாதார மற்றும் பாதுகாப்பு வாரத்திற்காக செய்தியாளர் மாநாடு நடத்திமை.
- வேலைத்தலத்தில் தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கான சுகாதாரம் பற்றிய விழிப்புணர்ச்சி பயிற்சிப்பட்டறையை நடத்துதல்.
- ICTAD உடன் இணைந்து நிருமாணத் துறையில் பணியாளர்களுக்குப் பயிற்சிப் பட்டறையை நடத்துதல்.
- தேசிய தொழில், பாதுகாப்பு வாரம் தொடர்பில் பிரதான கருத்தரங்கினை நடத்துதல்.
- பெருந்தோட்டத் துறையில் ஈடுபடுகின்ற பணியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தை நடத்துதல்.
- **கொழும்புப் பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டத்தை** நடத்துதல்.
- டிப்புளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளின் பட்டமளிப்பு விழாவினை நடத்துதல்
- சுகாதார பயிற்சிப்பட்டறைகளை ஒழுங்குபடுத்தியமையும், சிரம வாசனா நிதியத்தின் பங்களிப்புடன் தொழில்தருநர்கள், பணியாளர்களின் தேவையின்படி இலவசமாக மூக்குக் கண்காடிகளை வழங்கியமை.
- விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் தொழில்தருநர்கள், பணியாளர்களின் விழிப்புணர்வினை அதிகரித்தல்.
- வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் பல்வேறு கருத்திட்டங்களினூடாக தொழில்தருநர், பணியாளர்களுக்கான விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சகாதாரத்தை அதிகரிக்கும் நோக்கில் நிறுவனத்தில் மருத்துவ ஆய்வுகூடமொன்றைத் நிருமாணிப்பதற்கு திட்டமிடுல்.
- கோ-லங்கா நிறுவகத்துடன் இணைந்து பயிற்சிப்பட்டறையொன்றை நடத்துதல்.
- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் ஐந்து ஆண்டு கூட்டுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

**மேலுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்**

- **இலங்கையில் தொழில்சார்பாதுகாப்பு மற்றும் சுகாதரர்தை மேம்படுத்துவதற்காக முத்தரப்பு பயிற்சிப்பட்டறையை நடத்துதல்**

நிருமாணத் துறையில் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக ICTAD உடன் இணைந்து முத்தரப்பு பயிற்சிப்பட்டறையை நடத்துதல்.




- **சர்வதேச தொழில்தாபனத்தின் நிதி உதவியுடனான GREEN JOBS கருத்திட்டம் பற்றிய அறிவினைப் பரப்பும் பயிற்சிப்பட்டறையை நடத்துதல்.**

சர்வதேச தொழில் தாபனத்தின் GREEN JOBS கருத்திட்டத்தின் கீழ் பிறிதொரு கட்டத்தின் கீழ் சர்வதேச தொழில் தாபனத்தின் நிதி உதவியுடன் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் நடத்தப்பட்ட பயிற்சிப்பட்டறைகளிலிருந்து பெறப்பட்ட அறிவினைப் பரப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று கொள்ளுப்பிட்டி ரேணுகா ஹோட்டலில் நடத்தப்பட்டது. மேல் மாகாண உள்ளூராட்சி சபை அலுவலர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் நிறைவேற்றுத்தர அலுவலர்கள் இந்தப் பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றியிருந்தனர்.





### ❖ தொழில்சார் பயிற்சி ஆலோசகர்களுக்கான தொழில்சார் பாதுகப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் 03 நாள் பயிற்சிப்பட்டறையை நடத்தியமை

நிதி உதவியுடன் தமிழ், சிங்கள மொழி மூலம் தொழில்சார் பாதுகப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் தொழில்சார் பாதுகாப்பு ஆலோசகர்களுக்கு 03 நாள் பயிற்சிப்பட்டறை மிகவும் வெற்றிகரமாக செப்ரெம்பர் 18,19,20,25,26 மற்றும் 27 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டிருந்த துடன், 20 சிங்கள் மொழி மூல தொழில்சார் பாதுகாப்பு பயிற்சியாளர்களும், 20 தமிழ் மொழி மூல தொழில்சார் பாதுகாப்பு பயிற்சியாளர்களும் இதில் பங்குபற்றியிருந்தனர்.

இந்தப் பயிற்சிப்பட்டறைக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பங்குபற்றியிருந்த பயிற்சியாளர்கள் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் சிறந்த அறிவினைப் பெற்றிருந்ததுடன், இது நாட்டில் தேசிய அமைதியை மீண்டும் கட்டி யெழுப்புவதற்கு உதவுகின்றது.

### ❖ 2012.10.05 ஆம் திகதி தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வாரத்திற்கான செய்தியாளர் மாநாட்டினை நடத்தியமை

தேசிய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான செய்தியாளர் மாநாடு, தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரர காமினி லொகுகே, அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டிருந்ததுடன், தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர் திரு.டபிள்யு.ஜே.எல்.யு. விஜயவீர, தொழில் ஆணையாளர் அதிபதி திருமதி பேள் விஜயவீர, கைத்தொழில் தொடர்புகள் பிரிவின் தலைவர் திருமதி சுஜாதா விஜயசுந்தர மற்றும் தேசிய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி திருமதி.டக்டர்.என்.சி அமரசிங்க ஆகியோரும் இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர். தேசிய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி, தேசிய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிறுவகம், தொழில், தொழில் உறவுகள் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களம் ஆகியவை இணைந்து தொழில் ஊறுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், எதிர்காலத்திலும், தொழில்சார் பாதுகாப்பு வாரத்திலும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இதற்கும் மேலதிகமாக, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், ஐ.ரி.என், சிரச மற்றும் சுவர்ணவாஹினி மற்றும் லேக் கவுஸ் உள்ளடங்கலான இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சித்திட்டங்களினூடாக தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வராத்தின் போது பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. விஜயா செய்தித் தாள் இதற்குத் தலைமைத்துவத்தை வழங்கியிருந்தது.







### ❖ வேலைத் தலங்களில் தொழில்தருநர்கள், பணியாளர்களுக்கு சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரித்தல்

வேலைத் தலங்களின் தொழில்தருநர் மற்றும் பணியாளர்களுக்காக தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வாரத்தையொட்டி தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு, தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான பயிற்சிப்பட்டறை தேசிய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிறுவகத்தின் அலுவலர்களுடன் இணைந்து, செப்ரெம்பர் 06 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப 8.30 மணி முதல் பி.ப 1.30 வரை இடம்பெற்றிருந்தது.

## ❖ ICTAD உடன் இணைந்து நிருமாணத் துறையில் பணியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையை நடத்துதல்

நிருமாணத் துறையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக தொழில்சார் ஊறுகள் மற்றும் நோய்கள் தொடர்பில் உழைக்கும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்ட மொன்றை ICTAD உடன் இணைந்து தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களின் தலைமையில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் கேட்போர் கூடத்தில் 2013 ஒக்டோபர் 08 ஆம் திகதி நடத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான பகுதி நிருமாணத் துறையில் 'OSH in Zero' என்ற கருப்பொருளாகும். தொழில்சார் துறையில் தொழில்சார் கண் ஊறுகளைத் தடுத்தல் மற்றும் ஊறுகளுக்கு முகம்கொடுத்த பணியாளருக்கான கண் கிளினிக் நிகழ்ச்சித்திட்டமொன்று நடத்தப்பட்டது. நிருமாணத் துறையில் ஊறுகளால் இயலாமையடைந்த பணியாளருக்கு உதவிகள் வழங்கப்பட்டிருந்த துடன், தொழிலில் ஈடுபட்டிருக்கையில் இயலாமையடைந்த பணியாளர்களின் பிள்ளை களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்குதல் சிரம வாசனா நிதியத்தின் அனுசரணையில் இடம்பெற்றிருந்தது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் மற்றும் ICTAD இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தியிருந்தன.



## ❖ தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தின் போது நடத்தப்பட்ட பிரதான கருத்தரங்கு

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தின் போதான பிரதான நிகழ்ச்சித் திட்டமாகக் கருதப்பட்ட தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் தொழில் தருநர்களுக்கு விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக இந்த கருத்தரங்கு தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களின் தலைமையில் கலதாரி ஹோட்டலில் 2013 ஒக்டோபர் 10 ஆம் திகதி மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை நடத்தப்பட்டது. இலங்கையின் புகழ் பெற்ற நிறுவனங்களின் நிறைவேற்றுத்தர அலுவலர்கள், மனித வளங்கள் முகாமையாளர்கள் மற்றும் அலுவலர்கள் தொழில்சார் பாதுகாப்பு தொடர்பான எண்ணிக்கையான பயனுள்ள விரிவுரைகளை உள்ளடக்குகின்ற இந்த கருத்தரங்கில் பங்குபற்றியிருந்தனர். இந்தக் கருத்தரங்கிற்கு திரு.டயன் கோமஸ் மற்றும் வின்யா பாதக் வளஆளர்களாக பங்களிப்புச் செய்திருந்தனர். 2012 ஆம் ஆண்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் சான்றிதழ் பாடநெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்திருந்த 13 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல் தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களின் தலைமையில் இடம்பெற்றிருந்தது. இதற்கு பிரண்டிக்ஸ் தனியார் லிமிடெட் பிரதான அனுசரணை வழங்கியிருந்தது. 3M தனியார் லிமிடெட் மற்றும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்துடன் இணைந்து உப அனுசரணையை வழங்கியிருந்தன.






**பெருந்தோட்டத்துறையில் ஈடுபடுகின்ற பணியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தை நடத்துதல்**

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் உயர் டிப்புளோமாவை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ள கண்காணிப்பாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் பாதுகாப்பு அலுவலர்ககளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம், தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களின் தலைமையில் காலிமுகத்திடல் ஹோட்டலில் 2012 ஒக்டோபர் 12 ஆம் திகதி நடைபெற்றிருந்தது. WUSC மற்றும் 'எத்திகல்' தேயிலை பங்குடமை நிறுவனங்களினது இணைந்த நிதி உதவியுடன் பெருந்தோட்டத் துறையில் ஈடுபடுகின்ற பணியாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்தப் பாடநெறியில் ஐந்து தோட்டக் கம்பனிகளின் இருபது தோட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இருபது அலுவலர்கள் பங்குபற்றியிருந்ததுடன், அவர்களுக்கான 15 நாள் பாடநெறி வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, பெருந்தோட்டத் துறையில் தொழில்சார் பாதுகாப்பிற்கான வழிகாட்டல் கையேடு ஒன்றும் இந்நிகழ்ச்சத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டிருந்தது.









**பெருந்தோட்டத் துறையில் ஈடுபடுகின்ற பணியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கல் வைபவம்**

❖ **கொழும்பு பெரும்பாக கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு நகர சபையில் கழிவு நீர் முறைமையில் பணிபுரிகின்ற மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தொடர்பான விழிப்புணர்ச்சிப் பயிற்சிப்பட்டறை**

இந்தக் கருத்திட்டத்தின் கீழ், கொழும்பு பெரும்பாக கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு நகர சபையில் கழிவு நீர் முறைமையில் பணிபுரிகின்ற மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தொடர்பான விழிப்புணர்ச்சிப் பயிற்சிப்பட்டறை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் டிசெம்பர் 5, 11, 14, 17 மற்றும் 20 ஆம் திகதிகளில் நடைபெற்றிருந்தது.





❖ **கொழும்பு பெரும்பாக கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு நகர சபையில் கழிவு நீர் முறைமையில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தொடர்பான விழிப்புணர்ச்சிப் பயிற்சிப்பட்டறை**

இந்தக் கருத்திட்டத்தின் கீழ், கொழும்பு பெரும்பாக கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு நகர சபையில் கழிவு நீர் முறைமையில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தொடர்பான ஒரு நாள் விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் டிசெம்பர் 10 ஆம் திகதி நடைபெற்றிருந்தது. இந்தப் பயிற்சிப்பட்டறைக்கு கொழும்பு பெரும்பாக கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு நகர சபையில் கழிவு நீர் முறைமையில் பணிபுரிகின்ற 23 பணியாளர்கள் பங்குபற்றியிருந்தனர். இதில், கருவிகளை எவ்வாறு பயன்படுத்துதல், துணைப்பொருட்கள், அவற்றின் முக்கியத்துவம் மற்றும் தொழில்சார் ஊறு ஏற்படுகின்றபோது அவசர நிலைமையில் எவ்வாறு செயற்படுதல் வேண்டும் என்பவை பற்றி பணியாளர்களுக்கு விழிப்பூட்டப்பட்டது. இது, பணியாளர்களுக்கு அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான அறிவு எவ்வளவு முக்கியமானது என்பது பற்றிய பரந்த அறிவை வழங்குகின்றது.

## 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆற்றுவதற்காக திட்டமிட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்

## சுதந்திர வர்த்தக வலயப் பணியாளர்களுக்கான் கிளினுக்குகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்

### ❖ 2013/03/21 ஆம் திகதி பியகம வர்த்தக வலயத்தில் மருத்துவ கிளினுக்குகள்

சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்களில் ஈடுபடுகின்ற தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தின் தொழில்சார் வல்லுநர்களை மேம்படுத்துவதற்காக இலவச மருத்துவ கிளினிக் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினதும், சிரம வாசனா நிதியத்தின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டது. இதில் சுதந்திர வர்த்தக வலயத்தின் பணியாளர்களுக்கு கண் பரிசோதனை, ஈரல் பரிசோதனை, கேட்டல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை மற்றும் மருத்துவ பரிசோதனை ஆகியவை நடத்தப்பட்டிருந்தன. கண் பரிசோதனையின்போது கண்களில் பலவீனங்களுடையவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்தப் பணி இலக்கு வெற்றியடைவதற்கு பியகம முதலீட்டுச் சபை உதவியிருந்தது. இதற்காக 250 பணியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## ❖ 2013/04/30 ஆம் திகதி அவிசாவலை சுதந்திர வர்த்தக வலயத்தின் மருத்துவ கிளினிக்குகள்

சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்களில் ஈடுபடுகின்ற தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தின் தொழில்சார் வல்லுநர்ககளை மேம்படுத்துவதற்காக இலவச மருத்துவ கிளினிக் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினதும், சிரம வாசனா நிதியத்தின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டது. இதில் சுதந்திர வர்த்தக வலயத்தின் பணியாளர்களுக்கு கண் பரிசோதனை, ஈரல் பரிசோதனை, கேட்டல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை மற்றும் மருத்துவ பரிசோதனை ஆகியவை நடத்தப்பட்டிருந்தன. கண் பரிசோதனையின்போது கண்களில் பலவீனங்களுடையவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்தப் பணி இலக்கு அவிசாவலை பியகம முதலீட்டுச் சபை உதவியிருந்தது. இதில் 225 பணியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## ❖ 2013/06/03 ஆம் திகதி கொக்கல சுதந்திர வர்த்தக வலயத்தின் மருத்துவ கிளினிக்குகள்

சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்களில் ஈடுபடுகின்ற தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தின் தொழில்சார் வல்லுநர்ககளை மேம்படுத்துவதற்காக இலவச மருத்துவ கிளினிக் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினதும், சிரம வாசனா நிதியத்தின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டது. இதில் சுதந்திர வர்த்தக வலயத்தின் பணியாளர்களுக்கு கண் பரிசோதனை, ஈரல் பரிசோதனை, கேட்டல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை மற்றும் மருத்துவ பரிசோதனை ஆகியவை நடத்தப்பட்டிருந்தன. கண் பரிசோதனையின்போது கண்களில் பலவீனங்களுடையவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்தப் பணி இலக்கு அவிசாவலை பியகம முதலீட்டுச் சபை உதவியிருந்தது. இதில் 225 பணியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.





## ❖ 2013/07/06 ஆம் திகதி கெலபோக்கா மருத்துவ கிளினிக்குகள்

பெருந்தோட்டத்துறையில் தொழில்களில் ஈடுபடுகின்ற தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தின் பணியாளர்களை மேம்படுத்துவதற்காக இலவச மருத்துவ கிளினிக் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினதும், சிரம வாசனா நிதியத்தின் நிதி உதவியுடன் கண்டி கெலபொக்க தோட்டத்தில் நடத்தப்பட்டது. இதில் சுதந்திர வர்த்தக வலயத்தின் பணியாளர்களுக்கு கண் பரிசோதனை, ஈரல் பரிசோதனை, கேட்டல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை மற்றும் மருத்துவ பரிசோதனை ஆகியவை நடத்தப்பட்டிருந்தன. கண் பரிசோதனையின்போது கண்களில் பலவீனங்களுடையவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டிருந்தன. இதில் சுமார் 250 பணியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## ❖ 2013/09/06 பெல்லிகெல்ல சுதந்திர வர்த்தக வலயத்தின் மருத்துவ கிளினிக்குகள்

சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்களில் ஈடுபடுகின்ற தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தின் தொழில்சார் வல்லுநர்ககளை மேம்படுத்துவதற்காக இலவச மருத்துவ கிளினிக் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினதும், சிரம வாசனா நிதியத்தின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டது. இதில் சுதந்திர வர்த்தக வலயத்தின் பணியாளர்களுக்கு கண் பரிசோதனை, ஈரல் பரிசோதனை, கேட்டல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை மற்றும் மருத்துவ பரிசோதனை ஆகியவை நடத்தப்பட்டிருந்தன. கண் பரிசோதனையின்போது கண்களில் பலவீனங் களுடையவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்தப் பணி இலக்கு பெல்லிகெல்ல பியகம முதலீட்டுச் சபை உதவியிருந்தது. இதில் 250 பணியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

**உழைக்கும் மக்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்துவதற்காக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் நடத்தியுள்ளது.**

### ❖ தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ் பாடநெறியை நடத்துதல்

2013/01/30 ஆம் திகதி தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பாடநெறிகளில் 10 ஆவது தொகுதி சான்றிதழ் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு தொழில்சார் துறைகளைப் பிரதிநிதித் துவப்படுத்துகின்ற உயர்தொழில் வல்நுநர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர். ஓவ்வொரு பாடநெறியின் காலம் 15 வாரங்கள். இந்தப் பாடநெறியை 13 மாணவர்கள் வெற்றிகரமாகத் தொடர்ந்திருந்தனர்.




2013/07/30 ஆம் திகதி தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பாடநெறிகளில் 11 ஆவது தொகுதி சான்றிதழ் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு தொழில்சார் துறைகளைப் பிரதிநிதித் துவப்படுத்துகின்ற உயர்தொழில் வல்லுநர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர். இந்தப் பாடநெறியை 16 மாணவர்கள் வெற்றிகரமாகத் தொடர்ந்திருந்தனர்.

### ❖ தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் டிப்புளோமா பாடநெறியை நடத்துதல்

2013/02/03 ஆம் திகதி தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பாட நெறிகளில் டிப்புளோமாவின் 5 ஆவது தொகுதிப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பல்வேறு தொழில்சார் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உயர்தொழில் வல்லுநர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர். ஓவ்வொரு பாடநெறியின் காலம் 10 மாதங்கள் என்பதுடன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சான்றிதழ் பாடநெறியினைப் பின்பற்றுதல் அல்லது பல்கலைக்கழகமொன்றின் பட்டக்கல்வி அல்லது உரிய துறையில் 05 வருட அனுபவம் கட்டயமானதாகும். முப்பத்தியெட்டு நிறைவேற்றுத்தர அலுவலர்கள் தற்போது இந்தப் பாடநெறியைப் பின்பற்றுகின்றனர். முழுப் பாடநெறியின் மூன்று அலகுகளுக்கான பரீட்சைகளில் இரண்டு அலகுகளுக்கான பரீட்சைகள் தற்போது நடத்தப்பட்டுள்ளன.






## ❖ வேலைத் தலங்களின் சுற்றாடல் அளவீடுகள்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், வேலைத் தலங்களின் சுற்றாடல்களை அளவிடுகின்றது. இங்கு, வேலை செய்கின்ற சுற்றாடலில் தூசு மட்டம், வெளிச்சம், வெப்பம், ஒப்பீட்டு ஈரப்பதன், சுகாதாரமற்ற காற்று என்பவற்றின் பரிசோதனை அளவீடுகள் பெறப்படுகின்றன.

## ❖ 2013/02/08 ஆம் திகதி கழிவுப் பொருட்களைக் கையாள்பவர்களுக்கான வழிகாட்டல் கையேட்டின் அறிமுகம்

கழிவுப் பொருட்களைக் கையாள்பவர்களுக்கான வழிகாட்டல் கையேடு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவக கேட்போர்கூடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையின் அலுவலர்கள், மாநகர சபைகளின், நகர சபைகளின் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் உள்ளடங்கலாக அதிக எண்ணிக்கையிலான அலுவலர்கள் இச்சந்தர்ப்பத்தில் ஒன்று கூடியிருந்தனர்.

## ❖ 2013/02/08 ஆம் திகதி தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் இணையத்தளம் அங்குரார்ப்பணம் (www.niosh.gov.lk)

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சகாதார நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் அங்குரார்ப்பணம் தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களின் தலைமையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வில் தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர் திரு.டபிள்யு.ஜே.எல்.யு.விஜயவீர மற்றும் தொழில் ஆணையாளர் அதிபதி திருமதி பேள் வீரசிங்க ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர். இந்த இணையத்தளம் நிறுவகத்தினால் ஆற்றப்பட்ட சேவைகளின் வெட்டுமுகங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைப் பதிவு செய்தல், பயிற்றப்பட்ட அலுவலர்களின் தகவல்களைப் பாதுகாத்தல் மற்றுமு் இலவசமாக இ-சஞ்சிகைக்கான பதிவு என்பவை கிடைக்கப்பெறுகின்றன.



**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள அங்குரார்ப்பணம்**

❖ **2013/02/13 ஆம் திகதி கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவத்தின் கொழும்பு நகர சபையின் பொறியிலாளர்களுக்கு நடத்தப்பட்ட பாடநெறி**

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்ட மொன்று எண்ணிக்கையிலான பொறியியலாளர்களுக்காக கொழும்பு நகர சபையில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் மு.ப.9.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரை பத்து செவ்வாய்க்கிழமைகளில் நடைபெற்றிருந்தது.

❖ **2013/02/14 ஆம் திகதி பெருந்தோட்டத் துறைக்காக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பாடநெறியில் உயர் பயிற்சி**

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பாடநெறியில் உயர் கயிற்சிப் பாடநெறியின் 2 ஆவது தொகுதி 2013.02.14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இருபத்தியாறு பேர் இந்த பயிற்சியில் பங்குபற்றியிருந்ததுடன், பாடநெறி மூன்று மாதங்களில் வெற்றிகரமாக நிறைவேறியிருந்தது. இவர்களுக்கு 'வோல்றீம்' தேயிலைத் தொழிற்சாலை மற்றும் 'சேன் கும்ஸ்' தேயிலைத் தொழிற்சாலைக்கு விஜயம் செய்ததனூடாக செய்முறைப் பயிற்சியும் வழங்கப்பட்டிருந்தது. இதற்கும் மேலதிகமாக, அவர்களது முன்னேற்றம் மூன்று மாதக் கருத்திட்டம், முன்னளிப்பு மற்றும் எழுத்துப் பரீட்சையினால் உறுதிப்படுத்தப்படுகின்றது.






**கள விஜயத்தின் போதான புகைப்படங்கள்**





2012 முதல் பாடநெறிக்கு இணையாக கையேட்டின் தயாரிப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், கையேடு அச்சிடப்பட்டு நிறைவுபெற்றிருந்தது. பெருந்தோட்டத் துறையுடன் தொடர்புபட்ட இந்த பாடநெறிக்கு V.V.Q. தரநிர்ணய சான்றிதழைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இறுதிக் கட்டமாக, இது தொடர்பான கலந்துரையாடல் மற்றும் தேவையான விடயங்களும் இருக்கின்றன.

**பயிரிடுவோருக்கான வழிகாட்டல் கையேடு**




### ❖ 2013.04.03 ஆம் திகதி தொழிற்றுறைத் தாதிகள் பாடநெறி ஆரம்பம்

தொழிற்சாலைகளின் தாதியர்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பாடநெறி யொன்று நடத்தப்பட்டது. சுமார் ஆறு தாதியர்கள் இந்தப் பாடநெறிக்கு பங்குபற்றியிருந்ததுடன், இந்தப் பாடநெறி ஐந்து புதன்கிழமைகளில் நடத்தப்பட்டிருந்தது.

### ❖ 2013/06/11 ஆம் திகதி தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சூழல் பாதுகாப்பு பயிற்சிப்பட்டறையை நடத்துதல்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் மற்றும் Nolanka Manufacturing Colombo இந்த பயிற்சிப் பட்டறையை ஒழுங்குபடுத்தியிருந்தன.தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதராம் தொடர்பான விரிவுரை மற்றும் சூழல் சட்டங்கள் மீதான விரிவுரை, கழிவு முகாமைத்துவம் மீதான விரிவுரை மற்றும் மீதான விசேட நிகழ்ச்சித்திட்டம் தேசிய தொழில் கற்கைகள் நிறுவக கேட்போர்கூடத்தில் நடைபெற்றிருந்தது. பல்வேறு துறைகளில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர்.




**தொழில்சார் பாதுகாப்பு,சுகாதாரம் மற்றும் சூழல் பாதுகாப்பு பயிற்சிப்பட்டறை**

## ❖ தொழில்சூழலியல் தொடர்பான பயிற்சிப்பட்டறை

2013/07/10 ஆம் திகதி இலங்கையின் 1 ஆவது தொழிற்சூழலியல் மாநாடு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் மற்றும் இலங்கை மருத்துவச் சங்கம் மற்றும் பொருளாதார வல்லுநர் சமூகத்தின் ஒருங்கிசைவுடன் ஹின்ஸ்பெறி ஹோட்டலில் நடத்தப்பட்டது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி டாக்டர் சம்பிக அமரசிங்க விசேட விரிவுரையை நிகழ்த்தியிருந்தார். சுமார் 200 உயர்தொழில் வல்லுநர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர். வைத்தியர்கள் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்திற்கு நன்றி தெரிவித்திருந்தனர். அமெரிக்காவின் தொழிற் சூழலியல் சார்பில் நிபுணத்துவமிக்க வைத்தியரொருவர் மற்றும் அவுஸ்திரேலியாவின் தொழில் பாதுகாப்பு சார்பில் நிபுணத்துவமிக்க வைத்தியர் டேவிட் சப்பல் ஆகியோர் இந்த நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

## ❖ 2013/07/11ஆம் திகதி தொழிற் சூழலியல் தொடர்பான பயிற்சிப்பட்டறையை நடத்தியமை

முகாமையாளர்களுக்கான தொழிற் சூழலியல் தொடர்பான பிறிதொரு பயிற்சிப்பட்டறை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் நடத்தப்பட்டது. பல்வேறு துறைகளைச் சார்ந்த சுமார் 100 பேருக்கு வளஆளர்களாக டாக்டர் டேவிட் சப்பல் மற்றும் டாக்டர்.சி.என். சமரசிங்க ஆகியோர் கலந்துகொண்டிருந்த விசேட கருத்தரங்கொன்றும் நடத்தப்பட்டிருந்தது. 'கேற் வேய்' சர்வதேச பாடசாலை ஆசிரியர்கள் 150 பேர் பங்குபற்றியிருந்த விசேட கருத்தரங்கொன்று 'கேற் வேய்' சர்வதேச பாடசாலையில் டாக்டர் டேவிட் சப்பல், டாக்டர்.சி.என். சமரசிங்க மற்றும் டாக்டர் கபில ஜயரத்ன அவர்களில் தலைமையில் பி.ப 2.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை நடத்தப்பட்டிருந்தது.







**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் தொழிற்சூழலியில் தொடர்பான பயிற்சிப்பட்டறை**

## 2013 ஒக்டோபர் முதல் டிசெம்பர் வரை நடத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிகழ்சித்திட்டங்கள்

## தேசிய தொழில்சார் பாதுகாப்பு வாரம் - 2013

தேசிய தொழில்சார் பாதுகாப்பு வாரத்தினையொட்டி இலங்கையின் உழைக்கும் மக்களின் தொழில்சார் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கும், விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்குமாக ஊடகங்களினூடாக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

## ❖ 2013/10/03 ஆம் திகதி தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்திற்கான ஊடகவியலாளர் மாநாட்டினை நடத்திமை

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தினையொட்டி உழைக்கும் மக்களின் தகவல்கள் தொடர்பான செய்தியாளர் மாநாடு தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களின் தலைமையில் தொழில், தொழில் உறவுகள் அமைச்சுச் செயலாளர் திரு.டபிள்யு.ஜே.எல்.யு.விஜயவீர, தொழில் ஆணையாளா அதிபதி திருமதி பேள் வீரசிங்க மற்றும் தொழிற்றுறை உறவுகள் பிரிவின் தலைவர் திருமதி சுஜிதா விஜயசுந்தர மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி ஆகியோரின் பங்கேற்புடன் ஒலிம்பியா கவுஸில் நடைபெற்றிருந்தது.

## ❖ 2013/10/04 ஆம் திகதிய கொதிகலன் இயக்குநர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

கொதிகலன் இயக்குநர்களுக்கு தகவல்களை வழங்குவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடத்துவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.தொழிற்சாலைகளின் கொதிகலன் இயக்குநர்கள் மற்றும் முகாமையாளர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவர். இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஹட்டன் ஸ்ரேதன் பயிற்சி நிலையத்தில் மு.ப.10.00 மணி முதல் பி.ப 3.00 வரை நடத்தப்படும்.

- **2013/10/07 ஆம் திகதி கட்டுநாக்கா சுதந்திர வர்த்தக வலயத்தின் மருத்துவ கிளினிக்குகள்**

சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்களில் ஈடுபடுகின்ற தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தின் தொழில்சார் வல்லுநர்களை மேம்படுத்துவதற்காக இலவச மருத்துவ கிளினிக் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினதும், சிரம வாசனா நிதியத்தின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டது. இதில் சுதந்திர வர்த்தக வலயத்தின் பணியாளர்களுக்கு கண் பரிசோதனை, ஈரல் பரிசோதனை, கேட்டல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை மற்றும் மருத்துவ பரிசோதனை ஆகியவை நடத்தப்பட்டிருந்தன. கண் பரிசோதனையின்போது கண்களில் பலவீனங்களுடையவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்தப் பணி இலக்கு அவிசாவலை பியகம முதலீட்டுச் சபை உதவியிருந்தது. இதில் 250 பணியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

- **2013/10/10 ஆம் திகதி ஹோட்டல் துறையில் பணியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல்**

இந்த நிகழ்ச்சித்திட்டம் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் கேட்போர்கூடத்தில் பி.ப.5.00 மணி முதல் பி.ப.7.00 மணி வரை நடத்தப்படும். இதில், தொழில்சார் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவு பற்றிய சட்ட முறைமை கவனத்தில்கொள்ளப்படும்.

- 2013/10/25 ஆம் திகதி தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சான்றிதழ் பாடநெறியின் 12 ஆவது தொகுதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

- 2013/11/08 ஆம் திகதி மிகிரிகம சுதந்திர வர்த்தக வலையத்தில் மருத்துவ கிளினிக் நடத்தப்படும்.

**2014 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள விசேட நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்திட்டங்களும்**

- இந்த ஆண்டில் சிறந் பாதுகாப்பு விருது வழங்கல் வைபத்தை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இதற்காக தொழிற்றுறை (Industrial), சுகாதார சேவை (Hospitality), சேவைகளும் ஏனைய விடயங்களும் (Service & Construction) கவனத்தில் கொள்ளப்படும்.

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் உயர் சான்றிதழ் பாடநெறியில் NVQ மட்டத்தைப் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

- பெருந்தோட்டத்துறைக்கு வழிகாட்டல் கையேட்டினை 2013 ஆம் ஆண்டில் விநியோகிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

- பிறண்டிக்ஸ் நிறுவகத்தின் 38 ஆபத்தான நிலைகளைப் பரிசோதனை செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

# சிரம வாசனா நிதியச் சபை

சிரம வாசனா நிதியச் சபை 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சபைச்சட்டத்தின் கீழ் பணியாளர்களின் நலன்புரிக்காக நிதியத்தை வழங்கும் நோக்குடனும், அந்த நோக்கத்திற்குத் தேவையான ஒழுங்குகளை ஆக்குவதற்கும் தாபிக்கப்பட்டது. சிரம வாசனா நிதியச் சபை இலங்கையின் அனைத்துப் பணியாளர்களின் நலன்புரிக்காக பின்வருகின்ற 06 குறிக்கோள்களின் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்றது. இந்த நோக்கங்களுக்கான நிதி, தேசிய லொத்தர் சபையின் ஒருங்கிசைவுடன் நடத்தப்படுகின்ற **“ஜாதிக்க சம்பத”** வினூடாக வழங்கப்படுகின்றது.

**செயலாற்றுகை 2013**

| நிதியத்தின் இலக்குகள் | நிகழ்ச்சித்திட்டத்தின் / கருத்திட்டத்தின்/ செயற்பாட்டின் பெயர் | நிகழ்ச்சித்திட்டத்தின், கருத்திட்டத்தின், செயற்பாட்டின் பெயர் | |
|---|---|---|---|
| பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துதல் | சுகாதாரப் பட்டறை நிகழ்ச்சித்திட்டம் | பௌ. நிதி | 6 நிக.திட் 2.18 மில். |
| | வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | பௌ. நிதி | 3 நிக.திட் 1.29 மில். |
| | வேலையாளர் விழிப்பூட்டல் மற்றும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் | பௌ. நிதி | 11 நிக.திட் 0.93 மில். |
| பணியாளர்களுக்கு அவர்களின் நிறுவனங்கள் முன்னறிவித்தலின்றி மூடப்படுகையில் நிதி மற்றும் ஏனைய நன்மைகளையும் வழங்குதல | தொழில்நுட்பக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் | பௌ. நிதி | 8 நாடுநர் 0.6 மில். |
| | தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | பௌ. நிதி | 5 நிக.திட் 0.11 மில். |
| பணியாளர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்கையில் தற்காலிகமாக உதவியை வழங்குதல் | சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டம் ( ஒவ்வொரு தனிப்பட்ட வழக்கிற்கும் 10,000/= ) | பௌ. நிதி | 52 நாடுநர் 0.32 மில். |
| பணியாளர்களுக்கு அல்லது அவர்களில் தங்கியிருப்பவர்களுக்கு அவர்களின் இடர் காலத்தின்போது நிதி மற்றும் ஏனைய நன்மைகளையும் வழங்குதல் | இறப்பை ஏற்படுத்தும் விபத்து / முழு மையாக இயலாமையடைந்தோர் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் | பௌ. நிதி | 46 புலமையாளர் 0.72 மில். |
| நிதியை உருவாக்குதலும், பிரபல்யப்படுத்துதலும் | விற்பனை மேம்பாட்டு நி.திட்டம் / விளம்பரப்படத்தல் நி.தி | பௌ. | 14 நிக.திட் |
| தாபனத்தின் இயலுமையை பலப்படுத்துதல் | புதிய பதவியணிக்கான அங்கீகாரம் | பௌ. | 7 |
| | SOR இனைத் தயாரித்தல் | பௌ. | 4 |
| | SOR இனை அங்கீகரித்தல் | பௌ. | 4 |
| | பதவியினரின் ஆட்சேர்ப்பு | பௌ. | 7 |
| | பதவியினரின் பயிற்சி | பௌ. | 4 |
| சி.வா.நிதியத்தை மீள வேறிடத்தில் அமைத்தல் | உடன்படிக்கை மற்றும் அக அலங்கரிப்பு | பௌ. | 25% |

**2013 ஒக்டோபர் முதல் டிசெம்பர் 31 வரையான நிகழ்ச்சித்திட்டங்கள்**

4 மருத்துவ முகாம்களை நடத்துதல்

- ஹோமாகம முதலீட்டுச் சபை
- புத்தளம் மாவட்டம்
- குருணாகல் மாட்டம்
- கேகாலை மாவட்டம்

தேசத்திற்கு மகுடத்திற்கு இணையாக நடத்துவதற்கு

- குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற குடும்பங்களுக்கு வலுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதலும், நிதி உதவிகளை வழங்குவதற்கும்சிரம வாசான நிதியம் எதிர்பார்க்கின்றது.
- தேசத்திற்கு மகுடம் - 2014 இற்கு இணையாக 3 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
- மருத்துவ முகாம்களில் 3 தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
- சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டங்களை நாடுகின்ற 10 பேருக்குச் சட்ட உதவிகளை வழங்குதல்.
- இறப்பினை ஏற்படுத்துகின்ற விபத்துக்களினால் இறக்கின்ற பணியாளர்களின் சிறுவர்கள் 70 பேருக்கு புலமைப்பரிசில்களை வழங்கப்படும்.

**2014 ஆம் ஆண்டில் நடத்தவுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கான விசேட திட்டங்கள்**

- நாடளாவியரீதியில் 12 மருத்துவ முகாம்களை நடத்துதல்.
- வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் 4 இனை நடத்துதல்.
- 2400 வேலையாளர்களுக்கு 12 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.
- நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்திலிருந்து நட்டஈட்டினைப் பெறமுடியாதவர்களுக்கு நட்டஈட்டினைச் செலுத்துவதற்கு புதியதொரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.
- சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 60 வேலையாட்களுக்கு வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.
- வேலைத்தலம் காரணமாக நோய்கள் ஏற்பட்ட 40 பேருக்கு பணம் செலுத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.
- அடுத்த ஆண்டில் 100 புலமைப்பரிசில்களை வழங்குதல்.
- அடுத்த ஆண்டில் 100 சட்ட உதவிகளை வழங்குதல்.
- தொழிற்சாலை தீப்பற்றுதல், வெள்ளம், நில அதிர்வு போன்றவற்றினால் பாதிக்கப்படுகின்ற வேலையாட்களுக்கு உலர் பொருள் பொதிகளை விநியோகிப்பதற்கு நிவாரண நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும்.
- ISO சான்றிதழைப் பெறுதல்.
- சிரம வாசனா நிதியத்திற்கு கணினி முறைமையை நடைமுறைப்படுத்துதல்.
- மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 14 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.